விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 12 ஞாயிற்றுக்கிழமை (25.05.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 158




## வெளிநாட்டு அமைப்புகள் இலங்கையில் மனித உரிமையை ஆராயத் தடை விதிப்பு

### அரசு ஜெனீவாவுக்குத் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு அமைப்புக்கள் இலங்கையின் மனித உரிமை விவகாரங்கள் தொடர்பாகக் கண்காணிப்பதற்கோ அல்லது ஆராய்வதற்கோ அனுமதி வழங்கப்பட மாட்டாது என இலங்கை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தத் தடை உத்தரவு தொடர்பாக ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் பேரவைக்கு நேற்று முன்தினம் இலங்கை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது என திவயின நாளேடு செய்தி வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகளைப் பேணி பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டபோதிலும் சில அரச (10 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் கதறி அழ

## பதினாறு சடலங்களும் ஒரே இடத்தில் அடக்கம்

(கிளிநொச்சி)

நேற்று முன்தினம் முறிகண்டியில் இடம்பெற்ற தாக்குதலில் பலியான 6 சிறார்கள் உட்பட 16 பேரின் உடல்கள் நேற்றுச் சனிக்கிழமை ஒரே இடத்தில் மக்கள் கதறி அழ அடக்கம் செய்யப்பட்டன.

முன்னதாக கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் இராஜேந்திரம் தலைமையில் அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

16 உடல்களும் ஒன்றாக வைக்கப்பட்டு நடைபெற்ற இந் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ★ பெற்றோல் ரூபா 30 ★ டீசல் ரூபா 30

## ★ மண்ணெண்ணெய் ரூபா 10 ஆல் அதிகரிப்பு

# எரிபொருள் விலை நேற்று

# நள்ளிரவுடன் திடீர் அதிகரிப்பு

## ஏழை மக்கள் தலையில் கைவைப்பு

(கொழும்பு)

எரிபொருள்களின் விலை நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளதாக இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. இவ் விலை அதிகரிப்புக்கு நேற்று விசேடமாகக் கூடிய அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் மக்கள் நலன் சார்ந்த பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களையும் அபிவிருத்திப் பணிகளையும் நேரில் முன்னெடுப்பதற்காக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் யாழ்.-கிளிநொச்சி மாவட்டங்களுக்கான அபிவிருத்திக் குழுவின் தலைவரும், வடமாகாண விசேட செயற்பாட்டுக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக அந்த அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.வந்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,யாழ்.அமைச்சு அலுவலகத்தில் தங்கியிருந்து மேற்படி பணிகளை மேற்கொள்வார்.இதேவேளை (10ஆம் பக்கம் பார்க்க)

## பிரிகேடியர் பால்ராஜின் வித்துடல் முல்லைத்தீவில் விதைக்கப்பட்டது

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளின் தளபதி பிரிகேடியர் பால்ராஜின் வித்துடல்; தளபதிகள், போராளிகள், பல்லாயிரக்கணக்கான மக்களின் வணக்கத்துடன் நேற்று முன்தினம் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

மாரடைப்பால் சாவடைந்த பிரிகேடியர் பால்ராஜின் வித்துடலுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வீர வணக்கம் செலுத்தியதனைத் தொடர்ந்து வித்துடல் தாயக மண் எங்கும் கொண்டு செல்லப்பட்டது.

முல்லைத்தீவு நகரில் நடைபெற்ற பிரிகேடியர் பால்ராஜின் வீர வணக்க நிகழ்வு கடற்புலிகளின் துணைத் தளபதி விநாயகம் தலைமையில் நடைபெற்றது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பிக்குப் புதிய தலைமை நாளை மறுதினம் தெரியவரும்

(கொழும்பு)

நாளை மறுதினம் நடைபெறவுள்ள ஜே.வி.பியின் ஐந்தாவது தேசிய மாநாட்டின் போது அஃ.கட்சிக்கு புதிய தலைவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தற்போதைய தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய மத்திய குழு, புதிய நிர்வாகக் குழு ஆகியன நியமிக்கப்படவுள்ளன. அம் மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

தேசிய மாநாட்டில் பங்கேற்குமாறு விமல் வீரவன்ச மற்றும் அவருடன் இணைந்துள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது டன்பத்திரிகை அறிவித்தல்களுடன் அவர்களின் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மணலாறில் மோதல் 5 படையினர் பலி

(கிளிநொச்சி)

மணலாறு சிலோன் தியேட்டர் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் ஆயுதங்களைக் கைப்பற்றியுள்ளதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர்.

சிலோன் தியேட்டர் பகுதியூடாக நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியையடுத்தே இந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எல்லா அமைச்சர்களுமே காரணம்

### நான் மட்டும் பொறுப்பல்ல என்கிறார் பௌசி

(கொழும்பு)

எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்படுவதால் அவ் விலை அதிகரிப்புக்கு நான் மட்டுமன்றி அனைத்து அமைச்சர்களுமே பொறுப்பு என்றும் அமைச்சர் பௌஷி தெரிவித்துள்ளார்.

எரிபொருள்களின் விலை கடைசியாக ஜனவரி மாதம் அதிகரிக்கப்பட்டது. அப்போது ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 135 அமெரிக்க டொலராக உயர்வடைந்திருந்தது. கடந்த 4 மாதங்களாக விலையை அதிகரிக்காததன் காரணமாக பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு 7231 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் பதற்றம் இருவரைக் காணவில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் இரண்டு முஸ்லிம்கள் கடத்தப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தையடுத்து அன்றைய தினம் இடம்பெற்ற வன்முறைகளின் (10 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டில்லி டேர் டேவில்ஸ் திரில் வெற்றி

## அரையிறுதி வாய்ப்புக்கு பலப்பரீட்சை தொடர்கிறது

தினேஸ் கார்த்திக்கின் அபார ஆட்டத்தால் டில்லி டேர் டேவில்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் மும்பை இந்தியன்ஸ் அணியை வீழ்த்தியது. இவ்வெற்றியின் மூலம் தொடரில் 7-வது வெற்றியைப் பெற்றுள்ள டில்லி டேர் டேவில்ஸ் அணி 15 புள்ளிகளுடன் 3-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஐ.பி.எல் தொடரில் நேற்றிரவு டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 50-வது போட்டியில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் டெண்டுல்கர் தலைமையிலான மும்பை இந்தியன்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சேவாக் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி ஜெயசூர்யாவின் விளாசலில் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 176 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சனத் ஜெயசூர்யா 42 பந்துகளில் (6 பவுண்டரிகள், 5சிக்ஸர்கள் உட்பட) 66 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் உத்தப்பா 23 பந்துகளில் (5பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மகேஷ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 20 ஓவர்களில் 177 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி தினேஸ் கார்த்திக்கின் அதிரடி கன்னி அரைச் சதத்தின் மூலம் 19.5 ஓவர்களில் 5விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 179 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் தினேஸ் கார்த்திக் 32 பந்துகளில் (4பவுண்டரிகள் 3 சிக்ஸர்கள் உட்பட) 56 ஓட்டங்களையும் மஹ்ரூப் 13 பந்துகளில் (4 பவுண்டரிகள் உட்பட) 20 ஓட்டங்களைப் பெற்றதுடன் திவாரி 36, டாவான் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் சிமித் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இவ்வெற்றியின் மூலம் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணி தொடரில் 15 புள்ளிகளைப் பெற்று 3-வது இடத்தில் உள்ளதுடன் இப்போட்டியே இறுதி லீக் ஆட்டமும் ஆகும்.

.14 புள்ளிகளுடன் 4-வது இடத்திலுள்ள சென்னை அணிக்கு மற்றொரு போட்டி டெக்கான் சார்ஜர்ஸ் அணியுடன் உள்ளது. அடுத்து 12 புள்ளிகளுடன் 5-வது இடத்திலுள்ள மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மேலும் 2 லீக் ஆட்டங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# சென்னை அணி போராடித் தோல்வி; சிமித் அதிரடியில் வோர்ன் அணி அசத்தல்

மோர்கல் அரைச்சதம் விளாசி இறுதி வரை போராடிய போதும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 10 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது. சிமித், காம்ரன் அக்மலின் அதிரடியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 10-வது வெற்றியைப் பெற்றது.

ஐ.பி.எல் தொடரில் நேற்று மாலை சென்னையில் நடைபெற்ற லீக் சுற்றின் 49-வது ஆட்டத்தில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணி சிமித், காம்ரன் அக்மலின் அதிரடி அரைச் சதத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிமித் 51 பந்துகளில் ( 9பவுண்டரிகள்,4 சிக்ஸர்கள் உட்பட) 91 ஓட்டங்களையும் காம்ரன் அக்மல் 28 பந்துகளில் ( 4 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 53 ஓட்டங்களையும் அனாஸ்கர் 27 பந்துகளில் (5பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 41 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மோர்கல் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 212 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி மோர்கல் அதிரடியாக ஆடி இறுதிவரை போராடியும் 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் மோர்கல் 40 பந்துகளில் (6 பவுண்டரிகள், 4சிக்ஸர்கள் உட்பட) 71 ஓட்டங்களையும் பார்த்திப் பட்டேல் 40 பந்துகளில் (5பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 54 ஓட்டங்களையும் ரெய்னா 24 பந்துகளில் (6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 45 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் தான்வீர் 3 விக்கெட்டுக்களையும் ஷேன் வோர்ன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். ஆட்டநாயகனாக சகலதுறையிலும் சிறப்பாக ஆடிய மோர்கல் தெரிவானார். (5)

# யுவராஜ் அணி அசத்தல் வெற்றி டெக்கான் சார்ஜர்ஸ் பரிதாபம்

(மொகாலி)

மார்ஷ், சங்கக்கார அதிரடி அரைச்சதம் விளாச கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

கில்கிறிஸ்ட், ரோகித் சர்மா அதிரடி அரைச்சதம் விளாசியும் டெக்கான் சார்ஜர்ஸ் அணி பரிதாபமாக தோல்வியடைந்தது. ஐ.பி.எல் தொடரில் நேற்று முன்தினம் இரவு மொகாலியில் நடைபெற்ற லீக் சுற்றின் 48 ஆவது போட்டியில் யுவராஜ் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியும் கில்கிறிஸ்ட் தலைமையிலான டெக்கான் சார்ஜர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யுவராஜ் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார். இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத் தாடிய டெக்கான் சார்ஜஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களையிழந்து 175 ஓட்டங்களை எடுத்தது.


இதில் அணித்தலைவர் கில்கிறிஸ்ட் 42 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்)50 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 27 பந்துகளில் (3பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 50 ஓட்டங்களையும் மற்றும் கிப்ஸ் 34 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பதிலுக்கு 20 ஓவர்கள் நிறைவில் 176 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி மார்ஷ், சங்கக்காரவின் சிறப்பான அதிரடி ஆரம்பத்தின் மூலம் 19.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 178 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

இதில் மார்ஷ் 46 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 60 ஓட்டங்களையும் குமார் சங்கக்கார 25 பந்துகளில் (7 பவுண்ணரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 50 ஓட்டங்களையும் எடுத்தனர். ஆட்டநாயகனாக மார்ஷ் தெரிவானார். (5)

## முதலாவது டெஸ்டில்

# ஆஸி. வலுவான நிலையில்; மேற்கிந்திய தீவுகள் விக்கெட் சரிவு



(ஜமேக்கா)

பொன்டிங் சைமண்ட்ஸின் சிறப்பான ஆட்டத்தால் அவுஸ்திரேலிய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 431 ஓட்டங்களை எடுத்து ஸ்திரமான நிலையில் உள்ளது.

மேற்கிந்தியத் தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் கடந்த 22ஆம் திகதி ஜமேக்காவில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி,ரிக்கி பொன்டிங், சைமண்ட்ஸின் சிறப்பான ஆட்டத்தினால் அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 431 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் 158 ஓட்டங்களை எடுத்து தனது 35-வது சதத்தை பூர்த்தி செய்தார்.

மற்றும் ஆட்டமிழக்காமல் சைமண்ட்ஸ் 70, ஹொட்ஸ் 67, ஹஸி 56 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் எட்வோட்ஸ் 5 விக்கெட்டுக்களையும் சம்மி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 115 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சிமித் 32 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்ததுடன் மோட்டன் 23, சந்தர்போல் 25 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடி வருகின்றனர்.

பந்துவீச்சில் ஸ்ருவெட் கிளார்க் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் நேற்றாகும். (5)

# ரெய்லர் சதம்; ஹவ், மில்ஸ் அரைச்சதம் நியூசிலாந்து முதல் இன்னிங்ஸில் 381

(மன்செஸ்டர்)

ரெய்லர் சதமடிக்க நியூசிலாந்து அணி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 381 ஓட்டங்களை எடுத்தது.

இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணி 3 டெஸ்ட், 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகிறது.

இதில் கடந்த வாரம் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபுற்ற நிலையில் இரண்டாவது டெஸ்ட் நேற்று முன்தினம் மன்செஸ்டரில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி ரெய்லர் சதம்பெற நியூசிலாந்து அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 381 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ரெய்லர் ஆட்டமிழக்காமல் 154 ஓட்டங்களையும் ஹவ் 64 ஓட்டங்களையும் மற்றும் மில்ஸ் 57 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அண்டர்சன் 4 விக்கெட்டுக்களையும் சயிட் பொத்தம் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் இங்கிலாந்து அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்ட தேநீர் இடைவேளைக்கு ஆட்டம் நிறுத்தப்பட்டபோது ஒரு விக்கெட்டை இழந்து 42 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் குக் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததுடன் ஸ்ரோரஸ்17, அணித்தலைவர் வோகன் 4 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் ஓபிறின் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். (5)

உள்நாட்டு வெளிநாட்டுகளிற்கான!
துரித தபால்கள் பொதிகள் சேவை
FedEx Express
வாடிக்கையாளரின் நலன்கருதி
லண்டன், சுவீஸ், பிரான்ஸ் நாடுகளுக்கு 3 கிலோவுக்கு குறையாத 1Kg பொதிகளிற்கு 750/= ரூபா வீதமும்.
கனடாவுக்கான 3 கிலோவுக்கு குறையாத 1Kgபொதிகளிற்கு 850/= ரூபா வரையான விசேட சலுகை.
உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்
உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள
WESTERN UNION
குறிப்பு:-நீங்கள் அனுப்பப்படும் பொதிகளிற்கு காப்பறுதி உண்டு.
திருமுருகன் கொம் நெற்
259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. (நல்லூர் ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

# ஜனசக்தி சனசமூக நிலைய வைரவிழா சிறப்பு மலர்

## காலம் : 24.05.2008 - 25.05.2008

## அறுபது ஆண்டு கண்ட எங்களின் அரிய சக்தி பெருமையை எண்ணியெண்ணி பெருமிதம் கொள்வோம் நாமே!

### ஆதீன முதல்வரின் அருளாசி



மக்களின் அறிவுப்பசி போக்கும் அருமையான நிலையம்தான் நல்லூர் அரசடி வீதி ஜனசக்தி சனசமூக நிலையம். இந்த சனசமூக நிலையம் நன்கு விருத்தியடைந்து இன்று தனது வைர விழாவைக் கொண்டாடுவதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

காலத்தால் அழியாத கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு வகையில் மக்கள் மத்தியில் அளப்பரிய சேவையாற்றி வரும் ஜனசக்தி சனசமூக நிலையம் தனது பெயருக்கேற்ற உண்மையான நல்ல சேவை செய்யும் நிலையமாக விளங்குகிறது என்று கூறினால் மிகையாகாது.

இக்கட்டான இக்காலகட்டத்திலும் மக்களின் தேவையறிந்து பல வகையிலும் தன்னலமற்ற சேவையாற்றி வரும் ஜனசக்தி சனசமூகநிலையத்தினரின் 60ஆவது ஆண்டு வைர விழா சிறப்புற வேண்டுமென அருளாசி வழங் குகின்றோம்.

நல்லமுறையில், நல்லவகையில் சேவை செய்து வரும் ஜனசக்தி சனசமூக நிலையம் தொடர்ந்து வளர்ச்சி பெற்று, நல்லூர் வாழ் மக்களுக்கு நற்பணியாற்ற வேண்டுமென்று உளமாரப்பிரார்த்தித்து, நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து கந்தப்பெருமான் திருவருளோடு மேலும் நன்கு சிறக்க அருளாசி நல்கி இரும்பூதெய்துகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

நல்லை ஆதீன குரு முதல்வர்,
இரண்டாவது குரு மகா சந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்.

### துணைவேந்தர் வாழ்த்து




சமுதாய மேம்பாட்டுக்கான செயல் மையங்களாக சனசமூக நிலையங்கள் விளங்குகின்றன. இந்தவகையில் கடந்த 60 ஆண்டுகால சமுதாயப்பணியின் நிறைவாக நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையம் வைரவிழாவைக் கொண்டாடும் செய்தி மகிழ்ச்சி தருகின்றது.

மக்கள் சக்தி என்ற மகத்தான முகவரியுடன் தம் சூழமைவின் மக்களுக்கு ஜனசக்தி சனசமூக நிலையம் ஆற்றும் பணிகள் நிறைவானவை. இன்றைய மேம்பாட்டு திட்டங்களில் மக்கள் பங்கேற்பு என்று பெரிதும் பேசப்படும் கூட்டுறவுக்கு இலக்கணமாய் விளங்கும் ஜனசக்தி சனசமூகநிலையம் மென்மேலும் நிலைபேறான பணிகளினால் சிறந்திட அன்பான வாழ்த்துக்கள்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

### நூற்றாண்டு காலம் வாழ்க!



தனக்கென ஒரு தனிமுத்திரை பதித்துள்ள எமது ஜனசக்தி சனசமூக நிலையம் அறுபது என்ற மைல் கல்லைக் கடந்து கல்விமான்கள் பலரை ஏற்கெனவே உருவாக்கியதுடன் இன்றும் பல கல்விமான்களை உரு வாக்கி கொண்டிருக்கிறது. இச் சன சமூக நிலையத்தின் பணிகளின் சிறப்பை அறியாதார் இலர் என்றே கூற வேண்டும்.

பரந்த தனது சேவையைப் பல திக்குகளிலும் எட்டச் செய்து "சேர வாரீர் ஜகத்தீரே" என அனைவரையும்தன் பால் ஈர்த்துக்கொண்டிருக்கும் எமது சன சமூக நிலையத்தின் வளச்சியையும் சேவைகளையும எண்ணியெண்ணி இறும்பூதெய்துகிறேன். இன்று வைரவிழாக்காணும் எமது நிலையம் பல நூற்றாண்டு விழாக்களைக் காண வேண்டுமென வாழ்த்தி நிற்கிறேன்.

இ. இரவீந்திரராயு
நிலையத்தலைவர்.




### அகவை அறுபதுகண்ட 'ஜனசக்தி' சனசமூக நிலையம் வாழி



அகவை அறுபதினை எய்தி
அகமகிழ்ந் திருப்பவளே!
தகைமை சால் நின் புகழை
சாற்றிட வார்த்தை யேது
மிகப் பெரும் சாதனைகள் தம்மை
மிக்கவும் செய்தாயன்றோ
உகந்துனை புகழ வந்தேன்
உவந்திதை ஏற்பாயன்றோ!

* * *

ஆண்டு அறுபதிந்த அவனியில்
வாழ்வதும் ஓர் சாதனை தான்
நீயோ! அறுபதைத் தாண்டி நின்று
அரும்பணி ஆற்றுகின்றாய்
கலைகளைக் கட்டிக் காத்து
கவின் நிறை விழாக்கள் வைத்தாய்!
சமய நல் அறிவை யூட்டி
சான்றோராய் வாழ வைத்தாய்!
அமிழ் தெனும் தமிழைப் போற்றி
அரும் பெரு விழாக்கள் கண்டாய்!
ஆண்டு தோறும் விழா எடுத்து
அறிஞரைக் கூட்டி வந்து
பல்வகை நடன நாட்டியம் ,
பரதக் கலையினை காட்டி நின்றாய்!
பாலருக்கு பாடசாலை வைத்து
பக்குவமாக கல்வி தந்தாய்!
தண்ணீர் பந்தல் வைத்து
தாக சாந்தியும் ஆற்றி நின்றாய்!
அறிவினை புகட்ட வல்ல
அரிய தோர் வாசிக சாலைவைத்தாய்!
உடல் நலம் ஒன்றே நல்ல
உள நலம் பேணும் என்று
பல்வகை விளையாட்டுக்கள்
பாங்குடன் நடத்திக் காட்டி
எல்லையில் பரிசில் தந்து
ஏற்றமும் கண்டாயன்றோ?
எண்ணிடில் இது போல வேறோர்
சன சமூக நிலையம் உண்டோ?
ஒற்றுமை ஒன்றே உன் தன்
உயர்வுக்கு வழிசமைத்ததன்றோ?
அருகினில் கோவில் கொண்ட
ஐங்கரன் கோவில் தன்னை
பெருமை சேர் கோவிலாக்கி
பெரும் புகழ் படைத்து விட்டாய்
திரு நிறை தேரும் செய்து
அரும் பெரு கொடிமரமும் நாட்டி
பெரும் திருவிழாவும் கண்டு
பெருமையில் திளைத்தாய் வாழி!

**விகடகவி மு.திருநாவுக்கரசு (J.P., U.M)**
**முன்னைநாள் யாழ்.மாவட்ட நீதிபதி**

### அரசாங்க அதிபரின் ஆசிச்செய்தி



செம்மையும் வெண்மையும் கொண்ட கொடியில் நெற்கதிரும் தாரகையும் சின்னமாகக் கொண்டு 1948 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "ஜனசக்தி" சனசமூக நிலையம் இன்று தனது 60 ஆவது அகவையைக் கொண்டாடுவதனையிட்டு மட்டில்லா மகிழ்ச்சியடை கின்றேன்.

உள்ளூராட்சி அரசாங்க செயற்பாடுகளின் அடிப் படை அலகாகக் கொள்ளத்தக்கன சனசமூக நிலையங்கள் எனலாம். இவ்வகையில் மக்கள் பங்களிப்புடனான பொது நிர்வாகத்தில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு அளப்பரியது. இந்நிலையங்கள் தாம் சார்ந்த கிராம அலுவலர்பிரிவின் ஒட்டுமொத்தமான வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பைச்செய்யவேண்டியன. ஏனைய கிராம மட்டக் குழுக்கள், சங்கங்கள் என்பவற்றினையும் ஒருங்கிணைத்து ஒட்டுமொத்த சனசமூக அபிவிருத்திக்கான தூர நோக்கினைக் காலவரையறையில் தீர் மானித்து அந்நோக்கை அடைவதற்கான செயற் பணியை நிர்ணயம் செய்து அவற்றுக்கான குறிக்கோள்களை வகுத்து பொறுப்புக்களைப் பகிர்ந்து கிராமம் ஒன்றிணைந்து செயற்பட வழி செய்ய வேண்டியது சனசமூக நிலையங்களின் பணியாகும்.

இந்நெறியில் ஜனசக்தி மாதர் சங்கம், ஜனசக்தி விளையாட்டுக் கழகம், ஜனசக்தி இலவசப் பாலர் பாடசாலை, ஜன சக்தி கலாமன்றம் , ஜனசக்தி தண்ணீர்ப் பந்தல், ஜன சக்தி சிறுவர் பூங்கா, ஜனசக்தி சமாதானக்குழு, ஜனசக்தி மரணாதாரச் சங்கம், ஜனசக்தி பொது நூலகம், தையல் அகம் என்பவற்றினூடு சமூகப்பணிகளைத்தன்னகத்தே கொண்டு அரும்பணி புரிந்து இன்று வைரவிழாக் கொண்டாடுகின்றது. இதன்பணி மென்மேலும் சிறக்க எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*வாழ்க வளர்க*

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலர்,**
**யாழ். மாவட்டம்.**

### மாநகர ஆணையாளரின் வாழ்த்து



வைரவிழா கொண்டாட இருக்கின்ற ஜனசக்தி சனசமூக நிலையத்திற்கு எனது மனமார்ந்த நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மிக மகிழ்ச்சியடைகின்றேன்.

ஒருங்கிணைந்த மக்கள் சக்தியை பெயராகக் கெண்ட இந்த சனசமூக நிலையம் எமது நிர்வாகப் பகுதிக்குள் மக்களிற்காக பல்வேறு நலத்திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருவதை நான் நன்கறிவேன்.

முன்னுதாரணமாக இயங்கிவருகின்ற சனசமூக நிலையங்களில் ஜனசக்தி சனசமூக நிலையம் முதன்மையானது. இந்நிலையத்தினைத் திறம்பட இயக்கிவருகின்ற நிலைய நிர்வாகிகளுக்கும் அது சார்ந்த மக்களுக்கும் எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மேலும் இவ் வைரவிழாவைத் தொடர்ந்து மென்மேலும் நல்ல பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி மக்களுக்கு நல்ல பல சேவைகளை வழங்கவேண்டுமென மனதார வாழ்த்துவதோடு மாநகர ஆணையாளர் என்ற வகையில் எமது ஆதரவு என்றும் உண்டு என உறுதி கூறுகின்றேன்.

மு.செ.சரவணபவ
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

### வாழ்க என்று பாடுவோம்



அறுபதுகள் கண்டுவிட்ட சிகரம்
எங்கள்-சக்தி
ஆற்றல் மிக்க உள்ளங்களைக்
கொண்ட எங்கள்- சக்தி
இன்னல் துயர் வந்துவிட்ட வேளை
யிலும் கலங்காத எங்கள்- சக்தி
ஈகைக் குணம் என்றும்மாறாத
எங்கள் - சக்தி
உழைப்பால் உயர்ந்து விட்ட எங்கள் - சக்தி
ஊக்கமுள்ள இளைஞர்களை வளர்த்து விட்ட
எங்கள்-சக்தி
எண்ணும் எழுத்தும் மதிக்கின்ற எங்கள் - சக்தி
ஏழ்மைக்கு கரம் நீட்டும் சக்தி எங்கள் - சக்தி
ஐக்கியமாய் நாம் வாழ முன்நின்ற எங்கள் -சக்தி
ஒற்றுமை தான் வாழ்வென்று சொன்ன எங்கள் - சக்தி
ஓங்கி ஆலமரமாய் உயர்ந்து நின்ற எங்கள் - சக்தி
ஔடதமாய்மக்களுக்கு வாழ்வளித்த எங்கள்- ஜனசக்தி
வாழ்கவென்று பாடுவோம் ....
நூற்றாண்டு காண என்று வாழ்த்துவோம்!

நல்லை றூவன்
நிலையச் செயலாளர்.

(1247)

## மீண்டும் வருகிறார் சிந்துதுலானி



நெஞ்சிருக்கும் வரை படத்துக்குப் பிறகு டைரக்டர் எஸ். ஏ. சந்திர சேகரன் இயக்கும் படம் பந்தயம். இந்தப் படத்தில் கதா நாயகனாக நடிகர் நிதின் சத்யா நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக நடிப்பவர் நடிகை சிந்து துலானி. முதலில் நிதினுக்கு ஜோடியாக நடிக்க மல்லிகா கபூரை ஒப்பந்தம் செய்தனர். சம்பள பிரச்சினை காரணமாக மல்லிகா கபூரை நீக்கிவிட்டு சிந்துதுலானியை ஒப்பந்தம் செய்திருக்கிறார்களாம்.

## பசுபதிக்கு ஜோடியாக நடிக்கிறார் சிம்ரன்



திருமணத்திற்குப் பிறகு சினிமா உலகை விட்டு கொஞ்சம் விலகியிருந்த சிம்ரன் இப்போது மீண்டும் தமிழ் சினிமாவில் நடிக்க துவங்கியிருக்கிறார். நடிகை சிம்ரன்.

சேவல் படத்தில் இளம் நடிகர் பரத்துக்கு அக்காவாக நடிக்கும் சிம்ரனுக்கு இன்னொரு படத்தில் ஹீரோயின் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தியில் வெளியாகி ஹிட் ஆன டாக்சி படம் தமிழிலும் டாக்சி என்ற பெயரிலேயே ரீமேக் ஆகிறது. இந்தப் படத்தில் கதாநாயகனாக நடிப்பவர் நடிகர் பசுபதி. இவருக்கு ஜோடியாக நடிக்க நடிகை சிம்ரன் ஒப்பந்தமாயிருக்கிறார்.

## கவர்ச்சி காவியம் படைத்துள்ள சுபா புஞ்சா



சினிமாக்களில் மைக் பிடித்துப் பாட்டுப் பாடியே புகழ் பெற்றவர் நடிகர் மோகன். இதனால் அவரை மைக் மோகன் என்று பலரும் செல்லமாக அழைப்பார்கள்.

தற்போது மோகன் நீண்ட இடைவெளிக்கு பிறகு சுட்ட பழம் என்ற படத்தில் ஹீரோவாக நடித்து வருகிறார். இப் படத்தில் மோகனுக்கு ஜோடியாக நடிப்பவர் நடிகை சுபாபுஞ்சா. தமிழ் சினிமா இதுவரை கண்டிராத வகையில் சுபா புஞ்சா இப்படத்தில் கவர்ச்சி காவியம் படைத்திருக்கிறாராம்.

## அண்ணனுக்கு உதவும் பிரபுதேவா



நடிகர் பிரபு தேவா தனது நடனத் தொழிலில் இருந்து விலகி படங்களை இயக்கி வருகிறார். அவரது அண்ணன் ராஜு சுந்தரமும் அதே வழியைப் பின்பற்றுவதற்காக ஏகன் என்ற படத்தை இயக்கிவருகிறார். நடிகர் அஜீத் , நடிகர் நயன்தாரா நடிப்பில் உருவாகி வரும் இப்படத்தின் சூட்டிங் ஏற்பாடு மான்போர்ட் பள்ளியில் நடந்து வருகிறது. இது தவிர தேக்கடியில் ஒரு பாடல்காட்சியை படமாக்கவும் ராஜுசுந்தரம் முடிவு செய்துள்ளார். அஜீத் , நயன்தாரா ஆடும் இப் பாடலுக்கு நடிகரும் இயக்குநருமான பிரவுதேவா நடனப் பயிற்சியளித்து வருகிறார்.

## ஜூன் ஆறாம் திகதி தசாவதாரம் ரிலீஸ்



உலக நாயகன் கமல்ஹாசன் பத்து வித்தியாசமான கேரக்டர்களில் நடித்துள்ள தசாவதாரம் படம் பல்வேறு தடைகளை கடந்து வருகிற ஜூன் மாதம் 6ஆம் திகதி திரைக்கு வரவிருக்கிறது.


இதுபற்றி அதிகார பூர்வமான அறிவிப்பு வெளியிட்ட படத்தின் தயாரிப்பாளர் ஆஸ்கார் ரவிச்சந்திரன் தமிழ் , தெலுங்கு, இந்தி ஆகிய மூன்று மொழிகளில் 1000 பிரின்டுகளுடன் தசாவதாரம் படம் கம்பீரமாக வலம்வரவுள்ளது. ஒரு தமிழ்ப்படத்திற்கு இத்தனை பிரின்டுகள் போடப்படுவது இதுவே முதன்முறை என்றார்.

மேலும் தசாவதாரம் படம் அமெரிக்காவில் 60 சென்டர்களிலும் மலேசியாவில் 70 சென்டர்களிலும், சிங்கப்பூரில் 5 சென்டர்களிலும், இலங்கையில் 25 சென்டர்களிலும் , துபாயில் 8 சென்டர்களிலும், லண்டனில் 25 சென்டர்களிலும் என உலகம் முழுவதும் பல்வேறு அதிக எண்ணிக்கையிலான சென்டர்களில் திரையிடப்படுகிறதாம்.



## சினி விமர்சனம்

### சிலந்தி ஐ.டி.கலாசாரத்துக்கு சவுக்கடி



# சிலந்தி

கால்சென்டர் கலாட்டா, ஐ.டி. கலாசாரம் போன்றவை இளசுகளை எப்படியெல்லாம் சீரழித்து சின்னா பின்னமாக்குகிறது என் பதை தெள்ளத் தெளிவாகப் படம்பிடித்துக் காட்டியிருக்கும் படம் சிலந்தி.

புதுமணத் தம்பதிகளான முன்னாவும், மோனிகாவும் ஹனிமூனுக்காக புதுச்சேரி செல்கிறார்கள். அங்கு ஒரு உல்லாச தீவுக் குள் உல்லாசம் அனுபவிக்க தங்குகிறார்கள். அப்போது அந்த விருந்தினர் மாளிகையில் யாரோ தன்னை துரத்துவது போல உணர்கிறார் மோனிகா. அடுத்த நாளே அவரது தோழிகள் மூவர் அடுத்தடுத்து மர்மமாகக் கொலை செய்யப்படுகிறார்கள். அதுவரை கிளுகிளுப்பாக சென்ற கதைக் களத்தில் திடீரென பரபரப்பு தொற்றிக் கொள்கிறது. மர்மக் கொலைகளின் பின்னணியைப் பின்தொடர்கிறது படத்தில் மறு பாதிக்கதை.

அடுத்தடுத்து 3 கொலைகள், அதன் பின்னணியில் ஹைடெக் கலாசாரம் என்று பரபரப்பாக கதையை நகர்த்தியிருக்கிறார் இயக் குநர் ஆதி. முதல் பாதியில் மோனிகாவின் கிளுகிளுப்பும், முன்னாவின் துடிதுடிப்பும் படத்துக்கு பக்கபலமாக வந்து நிற்கிறது. மோனிகா தோன்றும் பெரும்பாலான காட்சிகளில், உள்ளாடைக ளுடனும், பாவாடை ரவிக்கையுடனும் இருப்பது இளைஞர்க ளுக்கு விருந்து. அழகி படத்தின் பாவாடை தாவணியில் வந்து இளைஞர்களை கிறு கிறுக்க வைத்த மோனிகா இந்தப் படத்தில் நீச்சல் உடையில் தோன்றி உசுப்பேற்றியிருக்கிறார்.

புதுமுகம் முன்னா பரவாயில்லை ரகம். மோனிகாவின் கிறங்கடிக்கும் கவர்ச்சிக்கு ஈடுகட்டி துடிப்புடன் நடித்திருக்கிறார். அறிமுக வில்லன் சந்துருவும் தன் பங்குக்கு நடித்திருக்கிறார். அவரது எதார்த்தமான நடிப்பு ரசிக்க வைக்கிறது.

எம். காந்தியின் பின்னணி இசையில் சந்தன வேட்டைக்காரா... முணுமுணுக்க வைக்கிறது. பவுசியா பாத்திமாவின் ஒளிப்பதிவும் ரசிக்க வைக்கிறது.



# கடோத்கஜன்

தயாரிப்பு:-ஷெமாரூ எண்டர் டெயின்மென்ட் லிட் மற்றும் சன் மற்றும் சன் அனிமேஷன்

இயக்கம்:-சங்கீதம் சீனிவாசராவ்.

இசை:-பிரவீன்மணி.

பீமனின் மகனான கடோத்கஜன் மாவீரன் மாயாஜால வித்தைக்காரன் அர்ஜுனனின் மகனும் தனது தம்பியுமான அபிமன்யூ காதலுக்கு பிரச்சினை வருகிறது. தன் வீரத்தாலும் மாயாஜால வித்தையாலும் கடோத்கஜன் காதலர்களை எப்படி சேர்த்து வைக்கிறான் என்பது கதை.

பச்சிளம் குழந்தையாக தொட்டிலில் படுத்திருக்கும் போதே தன்னைக் கடத்த வந்தவர்களை பந்தாடுவது, 5 வயதில் கடலுக்கு அடியில் உள்ள தங்க முத்தைக் கொண்டு வருவது என்று அவனது சாகசங்கள் தொடர்கிறது.

பிறகு விருமாண்டி மீசையுடன் வளர்ந்த பிறகு தம்பியின் காதல் பிரச்சினை கேள்விப்பட, அவர்கள் காதலை நிறைவேற்ற கடோத்கஜனின் சாகசங்கள் மீண்டும் தொடர்கிறது.

ஒவ்வொரு காட்சியும் நகைச்சுவை ததும்ப வடிவமைக்கப்பட்டிருப்பது தனிச் சிறப்பு. கடோத்கஜன் நண்பனான குட்டியானை செய்யும் அட்டகாசங்கள் குழந்தைகளை குலுங்கி குலுங்கி சிரிக்க வைக்கிறது.

கண்ணன் கதை சொல்லும் பாடலும், காட்சிகளும் அருமை. அடர்ந்த காடுகள், பெரிய அரண்மனைகள், ஆழ்கடல் என்று ஒவ்வொரு காட்சியும் பிரமிக்க வைக்கிறது. நாமும் அங்கு செல்வது போன்ற உணர்வை ஏற்படுத்துவதில் அனிமேஷன் தொழில்நுட்ப கலைஞர்களின் உழைப்பு தெரிகிறது.

அனிமேஷன் படம் என்றாலும் இசைக்கும், பாடல்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். கடோத்கஜனை குழந்தைகளுக்கு பிடிக்கும்.



# காதல் என்றால் என்ன?

தியாவின் இளமை துள்ளல் நடிப்பை நம்பி வெளிவந்திருக்கும் படம் காதல் என்றால் என்ன? மெருகு கூடிய அழகுடன் பரதம் கற்றுத்தரும் கேரக்டரில் நடித்திருக்கிறார் தியா. தியாவின் அழகில் பிளஸ் 2 மாணவன் முதல் முதியவர் வரை அத்தனை பேருமே கிறங்குகிறார்கள். தியாவின் பின்னாலேயே சுற்றுகிறார்கள். ஒருவர் மட்டும் இன்னும் ஒருபடி மேலே போய் தியாவுக்கு நடுரோட்டில் முத்தமிடுகிறார். இந்த விவகாரம் பொலிஸ் நிலையத்துக்குப் போகிறது. முத்தம் கொடுத்த வரை மூச்சுமுட்ட அடித்தே கொல்கிறார் பொலிஸ்காரரான சரண்ராஜ்.

அதன் பின்னர் சரண்ராஜ்க்கு தியா மீது காதல் வர... தியாவோ நாயகன் வீராவை காதலிக்க... பரபரப்பு கூடுகிறது. எங்கே தியா நமக்குக் கிடைக்காமல் போய்விடுவாரோ எனக் கருதும் சரண்ராஜ். தியாவை வீட்டுச் சிறையில் அடைகிறார். தியாவை



மீட்க வீரா எடுக்கும் முயற்சிகளும், அதில் வெற்றி பெறுவதும்தான் படத்தின் மீதிக் கதை. படத்தின் ஹீரோ வீராவின் நடிப்பைப் பற்றி முதலில் சொல்வதை விட சரண்ராஜின் நடிப்பைப் பற்றித்தான் சொல்ல வேண்டும். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நடித்திருக்கும் அவர் மார்க்குகளை ஸ்கோர் செய்துள்ளார். பொலிஸ் அதிகாரியின் நல்ல உடற்கட்டும்,ஆக்ரோஷமும் ரசிக்க வைக்கிறது.

படத்தின் ப்ளஸ் தியா என்று சொல்வதா, தியாவின் கவர்ச்சி என்பதா ? பரதம் கற்றுத் தரும் காட்சியிலும், சரண்ராஜிடம் சிக்கி தவிக்கும் இக்கட்டான நிலையிலும் நடிப்பு மிளிர்கிறது. அதைவிட அதிகமாக கிளாமர் மிளிரோ மிளிரென்று மிளிருகிறது. நீச்சல் உடையணிந்து வரும் காட்சி வெயிலுக்கு ஏற்ற ஜிலு ஜிலு ஐஸ்கட்டி.

நாயகன் வீரா இன்னம் முயற்சிக்க வேண்டும் நடிப்பதற்கு. சரண்ராஜுக்கு இணையாக வசனம் பேசும் காட்சியில் ஆக்ரோஷம் தெரியவில்லை. சில காட்சிகளில் இது சிரிப்பு சண்டையா? என்று கேட்கத் தோன்றுகின்றது.

மற்றபடி ஜன்னல் கம்பியைப் பெயர்த்தெடுத்து, தியாவின் அறையில் நுழைந்து, சரண்ராஜின் கட்டுப்பாட்டையும் மீறி காதல் செய்யும் காட்சிகள் த்ரில்லான அருமை. காமெடியன்கள் மயில்சாமி, சிங்கமுத்து. காளிமுத்து கோஷ்டியினர் சிரிக்க வைக்க முயற்சித்திருக்கிறார்கள். ஒத்தப்பாட்டுக்கு ஆடினாலும் நல்ல குத்துப்பாட்டு என்பதால் லக்ஷா ரசிக்க வைக்கிறார்.

# "பத்து பத்து"

இந்தியன் ட்ரீம் மேக்கர்ஸ் பட நிறுவனம் தயாரித்து வந்த பத்து பத்து படத்தின் அனைத்துப் பணிகளும் நிறைவடைந்து படம் வரும் ஜூன் மாதம் திரைக்கு வரத் தயாரகவுள்ளது. கதாநாயகன் , கதாநாயகி என எவரையும் குறிப்பிடலாம் ஆறு முக்கிய கதாபாத்திரங்களைச் சுற்றியே உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் படத்தைப் புதுமுகம் ஸத்யம் இயக்கியிருக்கிறார்.

### கிரிக்கெற் சார்ந்த கதை

பத்து பத்து பற்றி அவரிடம் கேட்ட போது இந்தியா–பாகிஸ்தான் இடையே பகல்–இரவு கிரிக்கெற் போட்டி நடந்துகொண்டிருக்கும்போது சரியாக இரவு 10.10 மணிக்கு ஓர் அதிர்ச்சியான சம்பவம் நடை பெறுகிறது.

அந்தச் சம்பவத்துக்கு தொடர்பில்லாத சிலர் அதில் மாட்டிக் கொள்கிறார்கள். அதிலிருந்து விடுபட அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளே கதை.

இப்படத்தில் , கவர்ச்சியில் கலக்கி இருக்கிறாராம் சோனா

படத்தின் ஒவ்வொரு காட்சியும் ரசிகர்களுக்குப் புதிய அனுபவத்தை தரும் . பழம் பெரும் இசையமைப்பாளர் எல். வைத்தியநாதனின் மகன், எல்.வி.கணேசன் இந்தப்படத்திற்கு இசையமைத்திருக்கிறார்.

கேட்போரை மெய்மறக்கச் செய்யும் ஐந்து பாடல்களை வினையா , சங்கீதா, ரோஷினி, தஞ்சை சின்ன பொண்ணு என்கிற பெண் பாடகிகள் மட்டுமே பாடியுள்ளனர்.

பாடல்கள் –யுகபாரதி, முத்துவிஜயன்.

ஒளிப்பதிவு –ஸ்ரீகணேசன், படத்தொகுப்பு– எம். ஜெயராம்.

தயாரிப்பு– ராஜேஸ்வரி ஞானசம்பந்தம்.

# மனித உரிமைகள் சபையில் இருந்து இலங்கை வெளியேற்றப்பட்டமை ஐ.நா சபைக்கு கிடைத்த வெற்றி

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் மகிழ்ச்சி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் சபையில் இலங்கை உறுப்புரிமை இழந்தமையானது ஐக்கிய நாடுகள் சபையின் வெற்றியாகும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

நியூயோர்க்கை தலைமையிடமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கான அங்கத்துவம் மறுக்கப்பட்டதனூடாக மனித உரிமைகள் சபை சிறந்த தரத்தை எட்டியுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளினால் பாதிக்கப்பட்டோருக்கும், மனித உரிமைகள் பேரவைக்கும் கிடைக்கப்பெற்ற பாரிய வெற்றியாக உள்நாட்டு, வெளிநாட்டு மனித உரிமை ஆர்வலர்கள் இத் தோல்வியைக் கருதுகின்றனர்.

47 உறுப்பினர்களைக் கொண்ட மனித உரிமைகள் சபையில் 15 ஆசனங்கள் வாக்கெடுப்பின் மூலம் தெரிவு செய்யப்படும். ஆசியப் பிராந்தியத்துக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 4 ஆசனங்களுக்கு 6 நாடுகள் போட்டியிட்டன.

ஜப்பான் 155 வாக்குகளுடனும் தென் கொரியா 139 வாக்குகளுடனும் பாகிஸ்தான் 114 வாக்குகளுடனும் பாஹ்ரெய்ன் 142 வாக்குகளுடனும் ஆசியப் பிராந்திய நாடுகளுக்கான 4 ஆசனங்களையும் வெற்றி கொண்டன.

வாக்கெடுப்பில் போட்டியிட்ட இலங்கை 101 வாக்குகளையும் கிழக்குத் திமோர் 92 வாக்குகளையும் மட்டுமே பெற்றன.

சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் உயர்ந்த தரத்தில் மனித உரிமைகளைப் பேணி பாதுகாக்க வேண்டும் என்று 2006 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளினால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருந்தது.

2006ஆம் ஆண்டு நிறுவப்பட்ட புதிய மனித உரிமைகள் சபையின் தொடக்க உறுப்புரிமை நாடுகளில் இலங்கையும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

எனினும் இம்முறை நடைபெற்ற வாக்கெடுப்பில் வெற்றி பெற இலங்கை தீவிர முயற்சிகளில் ஈடுபட்டது.

அங்கத்துவ உறுப்புரிமையை மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு பயன்படுத்தாது, மனித உரிமை மீறல்களுக்கு எதிரான முறைப்பாடுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முயற்சித்த நாடான இலங்கையின் அங்கத்துவம் நிராகரிக்கப்பட்டமை பாராட்டுக்குரியது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்திய பேச்சாளர் ரீவ் ச்ருசோவ் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு இலங்கை, கடந்த ஆண்டு பெலாரஸ் ஆகிய நாடுகளில் உறுப்புரிமை மறுக்கப்பட்டதன் மூலம் மனித உரிமைகளை மீறும் நாடுகளுக்கு நல்லதோர் பாடம் கற்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளில் மனித உரிமைகள் சபையில் கிடைக்கப்பெற்ற அங்கத்துவத்தை பயன்படுத்தி பல்வேறு மனித உரிமை மீறல்களை இலங்கை அரசாங்கம் வலிந்து மேற்கொண்டுள்ளதாக அரச சார்பற்ற அமைப்புக்கள் சுட்டிக் காட்டுகின்றன.

தண்டனைகள் மற்றும் விமர்சனங்களில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஓர் பாதுகாப்பு கவசமாக தனது உறுப்புரிமையை இலங்கை பயன்படுத்தியதாக அவை குற்றம் சாட்டுகின்றன.

ஆட்கடத்தல், படுகொலைகள், காணாமல் போதல், சித்திரவதைகள் போன்ற சம்பவங்கள் குறித்த விசாரணைகளின்போது ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படவில்லை என்று அனைத்துலக நாடுகளைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் குற்றம் சாட்டியிருந்தன.

தென்னாபிரிக்காவின் டெஸ்மன் டுட்டு, ஆர்ஜென்டீனாவின் அடொல்ப் இஸ்குவில் மற்றும் அமெரிக்காவின் ஜிம்மி காட்டர் ஆகிய நோபல் சமாதான விருதாளர்கள் மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு அங்கத்துவம் வழங்கப்படக் கூடாது என்று கோரிக்கை விடுத்திருந்தனர்.

அரச சார்பற்ற நிறுவனங்களின் எதிர்ப்பு காரணமாக 2007ஆம் ஆண்டு பெலாரஸ் அரசாங்கத்தின் உறுப்புரிமை வெற்றிகரமாக நீக்கப்பட்டது.

மனித உரிமைகள் சபையிலிருந்து இலங்கை நீக்கப்பட்டமையின் மூலம் பல்வேறு சித்திரவதைகள் மற்றும் மனித உரிமை மீறல் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கிடைத்துள்ளதாக ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திட்ட இணைப்பு அதிகாரி மைக்கல் அன்ரனி தெரிவித்துள்ளார்.

இத் தோல்வியின் மூலம் வலுவான செய்தியொன்று இலங்கைக்கு விடுக்கப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வாக்கெடுப்பு முடிவு இலங்கை தொடர்பாக அனைத்துலக சமூகத்தில் புதிய பேச்சுவார்த்தைகள் உருவாக வழிகோலும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கமும்,அதன் படைத் தரப்பும் மேற்கொள்ளும் மனித உரிமை அட்டூழியங்கள் நிறுத்தப்பட்டு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளின் கண்காணிப்பாளரின் உதவியைப்பெற்றுக் கொள்ள இந்த வாக்கெடுப்பு வாய்ப்பாக அமையும் என்றும் மைக்கல் அன்ரனி குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினரும் பாரியளவிலான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனினும் பொது மக்களுக்கு எதிராக அரசாங்கத்தினால் கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல்கள் இதனால் நியாயப்படுத்தப்பட முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் கண்காணிப்பகம் நிறுவப்படுவதன் மூலம் நாட்டு மக்கள் இரு தரப்பினராலும் மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல் சம்பவங்களில் இருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு ஏற்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமைகள் பேரவைக்கான ஐந்து பிராந்தியங்களில் ஏனைய இரண்டு பிராந்திய ஆசனங்களுக்கு டோட்டி நிலவியது.

மேற்கு ஐரோப்பிய பிராந்தியத்துக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு ஆசனங்களை ஐக்கிய இராச்சியமும், பிரான்ஸும் கைப்பற்றின.

கிழக்கு ஐரோப்பிய பிராந்தியத்துக்கான ஆசனங்களை ஸ்லோவாக்கியா மற்றும் உக்ரேய்ன் ஆசிய் நாடுகள் கைப்பற்றின.

அனைத்து பிராந்திய நாடுகளுக்கும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்புதே எமது விருப்பம் என்று ஆபிரிக்க ஜனநாயக அமைப்பைச் சேர்ந்த பிரான்க் கமுங்கா தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இம்முறை தெரிவு செய்யப்பட்ட அனைத்து நாடுகளும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பில் காத்திரமான பங்களிப்பு ஆற்ற வேண்டியது இன்றியமையாததாக அமைந்துள்ளது.

புதிய அங்கத்துவ நாடுகள் அரசியல் மற்றும் வேறு காரணிகளை புறந்தள்ளி மனித உரிமைகளினால் பாதிக்கப்படுவோரை பாதுகாப்பதற்கு அதிக முனைப்பு காட்டவேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாகிஸ்தான் மற்றும் பாஹ்ரெய்ன் ஆகிய நாடுகளில் மனித உரிமை விவகாரங்கள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென வினைத்திறனான மனித உரிமைகள் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தானும் பாஹ்ரென்னும்தற்போது அனைத்துலக மனித உரிமைகள் தர நிர்ணயங்களை உச்ச அளவில் பேணிப்பாதுகாக்க வேண்டுமென மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஜெனீவா பணிப்பாளர் ஜூலிட்டி டி ரிவிரோவா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் பேரவையை மேலும் வலுப்படுத்தும் வகையில் இரு நாடுகளும் செயலாற்ற வேண்டுமெனவும் கோரியுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கோடீஸ்வரர் பில்கேட்ஸ் இலங்கை வரவுள்ளார்

(கொழும்பு)

உலகில் பிரசித்திபெற்ற பிரபல கோடீஸ்வரரான பில்கேட்ஸ் இலங்கை வரவுள்ளார்.

உலகில் நிலவும் மின்சக்திப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு காற்றின் மூலம் மின்சாரம் பெறுவது தொடர்பாக ஆராய்ந்து வரும் உலகப் பிரசித்தி பெற்ற மைக்ரோ சொப்ட் கணனி நிறுவனத்தின் உரிமையாளரான பில்கேட்ஸை இலங்கைக்கு வருமாறு அமைச்சர் கரு ஜெயசூரிய அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ந-5)

## கொழும்பில் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்

(கொழும்பு)

கொழும்பு மோதரைப் பகுதியில் சிகை அலங்கார நிலையம் ஒன்றை நடத்திவந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் பி.இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

மூதூரைச் சேர்ந்த கொழும்பில் 15 வருடங்களாக வசித்து வருபவரான குணரட்ணம் ஜெயராசா என்பவரே கடத்திச் செல்லப்பட்டுள்ளமை குறித்து முறையிட்டுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கர்ப்பிணியான மனைவி தனது கணவரை விடுவிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளார். (ந-

## கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் உணவுப் பொருள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

மூன்று அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட தெல்லிப்பழை பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கு கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் திங்கள், செவ்வாய், புதன் ஆகிய மூன்று நாட்களும் அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ. சங்கத்தின் மூலம் உணவுப்பொருள் விநியோகிக்கப்படவுள்ளது.

சமுர்த்திப் பயனாளிகள் குறித்த தினத்தில் பொருட்களை மல்லாகம் தெற்கு J/212, மல்லாகம் மத்தி J/213 பிரிவைச் சேர்ந்தவர்கள் கிளை 09ஏ இலும், J/214 மல்லாகம் வடக்கு பிரிவைச் சேர்ந்தவர்கள் கிளை 10இலும், அளவெட்டி வடக்கு J/215, அளவெட்டி மத்தி J/216, பிரிவைச் சேர்ந்தவர்கள் கிளை 4இலும், அளவெட்டி கிழக்கு J/217, கணேஸ்வரம் J/218 பிரிவைச் சேர்ந்தவர்கள் கிளை 14 இலும், அளவெட்டி தெற்கு J/219,அளவெட்டி மேற்கு J/220 பிரிவைச் சேர்ந்தவர்கள் கிளை 3 இலும் பெற்றுக் கொள்ள முடியும் என வலி. வடக்கு பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ந)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஹாட்லிங் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் கல்லூரி மண்டபத்தில் அதிபர் என். தெய்வேந்திரராஜா தலைமையில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளதாக செயலாளர் சட்டத்தரணி வீ.குமாரசாமி அறிவித்துள்ளார். (ஓ-52)

◆◆◆

சரவணை பள்ளம்புலம் அருள்மிகு முருகமூர்த்தி திருக்கோவில் அறங்காவலர் சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் பிறவிடயங்களும் இடம்பெறும்.

உறுப்பினர்கள் அனைவரையும் கூட்டத்திற்கு சமுகமளிக்குமாறு செயலாளர் தி.ஸ்ரீகந்தராசா கேட்டுள்ளார்.

(ந-6)


## தொலைந்த அடையாள அட்டை

சின்னராசா தவேந்திரன், உதயசூரியன் ஒழுங்கை, உடுவில், சுன்னாகம் ஆகிய எனது 660032789V இலக்க அடையாள அட்டை பெரிய கடைக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தொலைந்து விட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி விலாசத்துக்கு அனுப்பி வைக்கவும்

-சின்னராசா தவேந்திரன்

(1243)

## நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு

ஜேர்மன் செட்பட் நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு இல.
021 222 5536
021 222 9749

(1246)

# செவ்வாய் கிரகத்தில் இறங்கும் செயற்கைக்கோள் மண்ணைத் தோண்டி ஆராய்ச்சி நடாத்தும்

(கலிபோர்னியா)

செவ்வாய் கிரகத்துக்கு அமெரிக்கா அனுப்பிய செயற்கைகோள் இன்று அங்கு இறங்குகிறது. அது செவ்வாய் கிரகத்தில் மண்ணை தோண்டி, அங்கு மனிதர்கள் வசிக்க முடியுமா என்று ஆராய்ச்சி நடத்தும்.

பூமிக்கு அருகில் இருக்கும் நிலவுக்கு அமெரிக்கா , ரஷ்யா போன்ற நாடுகள் மனிதர்களை அனுப்பி ஆராய்ச்சி மேற்கொண்டு வருகின்றன. அடுத்த இலக்காக சூரியனில் இருந்து 22 கோடியே 79 இலட்சத்து 40 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத்திலும், பூமியிலிருந்து சுமார் 67 கோடியே 90 இலட்சம் கிலோ மீற்றர் தூரத்திலும் உள்ள செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி நடத்த அமெரிக்கா முயற்சி மேற்கொண்டு வருகின்றது.

1965ஆம் ஆண்டு முதன் முதலாக மரைன்-4 என்ற விண்கலம் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்டது. பின்னர் 1976ஆம் ஆண்டும், அதன்பிறகு 21 வருடம் கழித்து 1997ஆம் ஆண்டும், பிறகு 2004ஆம் ஆண்டும் செயற்கைக்கோள்கள் அனுப்பப்பட்டன.

இவ்வாறு அனுப்பப்பட்ட செயற்கைகோள்களில் பாதிக்கும் மேற்பட்டவை குறிப்பிட்ட இலக்கை அடைய முடியாமல் தோல்வியில் முடிந்தன. அங்கு சென்ற சில செயற்கை கோள்களும், செவ்வாய் கிரகத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே படம் பிடித்து தகவல்கள் அனுப்பின. அவற்றின் மூலம் செவ்வாய் கிரகம் முழுவதையும் ஆராய முடியாததால், புதிதாக அனைத்து வசதிகளும் கொண்ட ஒரு செயற்கை கோளை அனுப்ப அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் முடிவு செய்து அதற்கான ஒரு விண்கலத்தை தயாரித்தது.

''போனிக்ஸ்'' என்ற பெயரில், 420 மில்லியன் கோடி டொலர் செலவில் தயாரிக்கப்பட்ட இந்த செயற்கைகோள், கடந்த ஆண்டு (2007) ஒகஸ்ட் மாதம் செவ்வாய் கிரகத்தை நோக்கி பயணமானது. மணிக்கு 21 ஆயிரம் கிலோ மீற்றர் வேகத்தில் பறந்த இந்த விண்கலம் தனது 9 மாத பயணத்துக்குப் பின்னர் இலங்கை நேரப்படி இன்று அதிகாலை 4.59 மணிக்கு செவ்வாய் கிரகத்தில் இறங்குகிறது.

செவ்வாய் கிரகத்தில் இந்த செயற்கை கோள் இறங்கி அங்குள்ள மண் மற்றும் பனிக்கட்டிகளை தோண்டி ஆராய்ச்சி நடத்தும். இந்த ஆராய்ச்சிக்காக போனிக்ஸ் விண்கலம் அங்கு 3 மாதங்கள் தங்கி இருக்கும். நீண்ட காலம் தங்கி இருந்து ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஒரே செயற்கைகோள் இது தான் என்பது குறிப்பிடத்தக்கது.

அது தோண்டி எடுக்கும் மண் மற்றும் பனிக்கட்டிகளை வைத்து செவ்வாய் கிரகத்தில் உயிரினம் ஏதாவது இருக்கிறதா? அல்லது உயிரினங்கள் ஏதாவது வாழ்ந்ததற்கு ஆதாரம் இருக்கிறதா ? செவ்வாய் கிரகத்தின் மண் மற்றும் தரைப்பகுதி சிவப்பு நிறத்தில் இருப்பதற்கு காரணம் என்ன? ஒரு வேளை பூமியைப்போல அங்கும் செம்மண் நிலம் இருக்கிறதா? அப்படியானால் மனிதர்கள் அல்லது விலங்குகள் வசிக்க முடியுமா? அல்லது தாவரங்கள் வளர வாய்ப்பு இருக்கிறதா? என்று இந்த செயற்கைகோள் ஆராயும். அங்கு கனிம வளங்கள் மற்றும் அபூர்வ இயற்கை வளங்கள் இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இது பற்றியும் போனிக்ஸ் செயற்கை கோள் ஆராய்ச்சி மேற்கொள்ளும்.

இதற்கு முன்னர் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பப்பட்ட செயற்கை கோள்கள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டுமே படம் எடுத்து அனுப்பின. ஆனால் இந்த போனிக்ஸ் செயற்கை கோள் செவ்வாய் கிரகம் முழுவதும் பரந்து படங்களை எடுத்து அனுப்பும். இதன் மூலம் செவ்வாய் கிரகத்தின் முழு வரைபடம் தயாரிக்கப்பட்டு அதன் மூலம் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படும்.

கலிபோர்னியா மாகாணம், பசடெனா என்ற இடத்தில் உள்ள ''ஜெட் புரபல்சன் லெபாரட்டரி'' என்ற ஆய்வகம் இந்த போனிக்ஸ் செயற்கை கோளை கண்காணித்து கட்டுப்படுத்தும். இந்த செயற்கை கோள் பத்திரமாக செவ்வாயில் தரைஇறங்கியதும், 15 நிமிடங்கள் கழித்து தனது சமிக்ஞைகளை (சிக்னல்) அனுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதில் தலைப் பகுதியில் 61/2 அடி உயர கம்பியில் பொருத்தப்பட்டுள்ள 2 அதி நவீன ஸ்டீரியோ கமராக்கள் துல்லியமான படங்களை எடுத்து அனுப்பும். அவற்றின் மூலம் எந்தப் பகுதியில் தோண்ட வேண்டும், அங்கு என்ன கனிம வளங்கள் உள்ளன. ஆராய்ச்சி மேற்கொள்ளும் நாசா விஞ்ஞானிகளுக்கு என்ன படங்களை அனுப்ப வேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்படும்.

இந்த ஆராய்ச்சியின் மூலம் கிடைக்கும் தகவல்களை வைத்து, நிலவுக்கு மனிதர்களை அனுப்பி ஆராய்ச்சி மேற்கொண்டது போல, பின்னர் செவ்வாய் கிரகத்துக்கும் மனிதர்கள் அனுப்பப்படலாம் என்று கருதப்படுகிறது. (ஓ-5)

## அனைத்து நிவாரணக்குழுக்களுக்கும் மியன்மார் நாட்டுக்குள் அனுமதி

(யாங்கூன்)

மியன்மார் நாட்டை நர்கீஸ் புயல் தாக்கியதில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள். லட்சக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்து தவிக்கின்றார்கள். இவர்களுக்கு உதவிகளை வழங்க உலக நாடுகள் முன்வந்து உள்ளன.

நிவாரணப் பணிகளில் ஈடுபட பல நாடுகளை சேர்ந்த சமூகநல ஆர்வலர்கள் முன் வந்தனர். ஆனால் யாருக்கும் அனு மதி அளிக்க மியன்மார் அரசு மறுத்து விட்டது.

## உலக தரிசனம்

ஐ.நா.சபை அனுப்பிய உதவிக் கப்பலை மட்டும் மியன்மார் ஏற்றுக்கொண்டது. வெளிநாட்டு சமூகநல ஆர்வலர்களையும் அனுமதிக்கவில்லை. இதனால் நிவாரணப் பணிகளில் சுணக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஐ.நா.பொதுச்செயலாளர் பான்கிமூன் அந்த நாட்டுக்கு சென்று புயல் பாதித்த பகுதிகளை பார்வையிட்டார். அப்போது அவர் நிவாரணப் பணிகள் அனைவரையும் சென்று அடையவில்லை என்று குறிப்பிட்டார்.

அவரது வேண்டுகோளை ஏற்று அனைத்து நிவாரணக்குழுவினரையும் மியன்மார் நாட்டுக்குள் அனுமதிக்க அந்த நாட்டு அரசு சம்மதித்துள்ளது. (ஓ-5)

# எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தலில் என் மகள் செல்சியா போட்டியிடுவார்

-முன்னாள் ஜனாதிபதி கிளின்டன்-

(வோஷிங்டன்)

எதிர்காலத்தில் ஜனாதிபதி தேர்தலில் என் மகள் செல்சியா போட்டியிடுவார் என்று அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி கிளின்டன் சொல்கிறார்.



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் மனைவி ஹிலாரி இப்போது நியூயோர்க் செனட்டராக இருக்கிறார். இப்போது அவர் ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக்கட்சி சார்பில் வேட்பாளராக நிறுத்தப்படுவதற்கான தேர்தலில் போட்டியிட்டு வாக்காளர்களை சந்தித்து வருகிறார். அவருக்கு உதவியாக பிரசார களத்தில் ஹிலாரியின் மகள் செல்சியா இறங்கி இருக்கிறார்.

இந்த நிலையில் பில் கிளின்டன் ஒரு பத்திரிகைக்கு பேட்டிஅளித்தார். அப்போது அந்த பத்திரிகை நிருபர் 28 வயதாகும் செல்சியா ஏதாவது தேர்தலில் போட்டியிடுவாரா என்று கேட்டார். இதற்கு பதில் அளித்த கிளின்டன் கூறியதாவது,

இந்த கேள்வியை சிறிது காலத்துக்கு முன்பு கேட்டிருந்தீர்கள் என்றால் (ஹிலாரி வேட்பாளராக போட்டியிட தேர்ந்து எடுக்கப்படுவதற்கு முன்பு) அவர் எந்த தேர்தலிலும் நிற்கமாட்டார் என்று கூறி இருப்பேன். நாங்கள் செய்த எல்லாமே அவருக்கு அலர்ஜியாக இருந்தது. இப்போது நிலைமை மாறிவிட்டது.

அயோவா மாநிலத்தில் இளைஞர்களின் ஓட்டுக்கள் கிடைக்காததால் தன் தாயார் ஹிலாரி தோல்வி அடைந்தார் என்பதை உணர்ந்ததும் அவர் ரொம்பவே மனம் உடைந்து போய்விட்டார்.

அவர் தன் முதலாளியிடம் சென்று என் தாயாரை இப்படி அம்போ என்று விட்டு விட முடியாது. அதனால் காலவரையறை இல்லாமல் விடுமுறை கொடுங்கள் அல்லது நான் வேலையில் இருந்து விலகிக்கொள்கிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டார். அதன் பிறகு ஹிலாரியின் பிரசாரக்குழுவில் அவர் ஐக்கியமாகிவிட்டார்.

பிரசாரத்தில் என் மகள் ஈடுபட்டது பிரசாரத்தில் திருப்புமுனையாக அமைந்தது. எதிர்காலத்தில் செல்சியா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என்று நம்புகிறேன் என்று கிளின்டன் கூறினார்.

ஹிலாரியை எதிர்த்து களத்தில் நிற்கும் ஒபாமா பற்றி உங்கள் கருத்து என்ன என்று கேட்டபோது, ஒபாமா திறமையானவர். அவரை நான் புரிந்துகொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன். எங்களது பால்யகால வாழ்க்கையில் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன என்று அவர் கூறினார். (ஓ-5)

# ஐ.நா.பொதுச் செயலர் சீனாவுக்கு விஜயம்

சீனாவில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் பார்வையிட ஐ.நா பொதுச் செயலாளர் பான் கிமூன் அந்நாட்டிற்கு பயணம் மேற்கொண்டுள்ளார். சீனாவில் உள்ள சிச்சுவான் மாகாணத்தில் கடந்த 12ஆம் திகதி கடும் பூகம்பம் தாக்கியது. இதில் 50ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்தனர். 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரைக்காணவில்லை.

மேலும் இந்த பூகம்பத்தில் 50லட்சம் மக்கள் தங்கள் வீடுகளையும் உடமைகளையும் இழந்து தவிக்கின்றனர். இந்த நிலையில் பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கிமூன் நேரில் சென்று பார்வையிட்டார்.

சிச்சுவான் மாகாணத்தில் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த யிங்சி என்ற இடத்திற்கு பான் கிமூன் நேரில் சென்றார். தனது சீன பயணத்தின் போது அவர் அந் நாட்டு பிரதமர் வென்ஜியா கோவையும் சந்தித்து பேசுவார் என்று தெரிகிறது. (ஓ-5)


பெருமைக்குரிய வாடிக்கையாளர்களே!

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

உங்கள் நன்மதிப்பு பெற்ற ஸ்தாபனம்
புதிதாக இறக்குமதி செய்துள்ள புத்தம்புதிய ரகங்கள் விற்பனைக்கு வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

1. புத்தம் புதிய டிசைன் ஷிபோன் சுரிதார், மல்லிகா சுரிதார் றெஸ் மற்றீரியல் போட்டோ இணைப்புடன்
2. New டிசைன் றிச் பழ கென்றாஸ்ட் பியூட்டி சில்க் சாரிஸ்
3. CAPSUL வித் பிளவுஸ் EXCLUSIVIE பான்ஷி சாரிஸ்
4. VARSHA சாரிஸ், GUINGHT பான்ஷி சாரிஸ்
5. JAMMU சாரிஸ் பான்ஷி செக் உடல் ஜரி சில்ஸ் மிக்ஸ் எம்பிரடர் கென்றாஸ் ஜரி போடர்
6. RAIGURU சாரிஸ், HANDLOOM உற்பத்தி மஸ்தான், கென்றாஸ் போடர் ஜரி சீக்குபின் போடர் உடன் புதிய ரகம்
7. பான்ஷிடஸ்ட் வேக் & கோல்ட் பிரிண்ட் சாரிஸ் வித்பிளவுஸ், சில்வர் வேக் புதிய தெரிவுகள்.
8. CLASSI CLADY பான்ஷி சாரிஸ்
9. OM, SHANT கோல்ட் & சில்வர் கலந்து வேக் செய்துள்ள புதிய சாரிஸ்
10. புதிய திருமணப் பட்டு புடைவைகள் அனைத்தும் சிறந்த தெரிவுகளாக பெற்றுக் கொள்ள வாருங்கள், வந்து பாருங்கள் வாங்கி மகிழுங்கள்

ஜி.எஸ்.லிங்கநாதன் அன் கோ

தலைமை ஸ்தாபனம் 13,14 பெரியகடை வீதி,
கிளை நிறுவனம் 47, பெரியகடை வீதி ,
யாழ்ப்பாணம்.

1)முதல் தளம், பலவிதமான துணி வகைகள் ஒரே இடத்தில் வித்தியாசமான தெரிவுகளை மஸ்லின் காட்டன் பிளேன், விசேடமாக.
அரவிந்த்மில், றெறின் பிளவுஸ் பீஸ் No A மீற்றர் 275-No B மீட்டர் 225/- சகல விதமான புடைவைகள் கலந்த பகுதி
2) 1ஆம் மாடி ஆடவருக்கான சேட் ரவுசர், சேட்டிங் சூட்டிங் ஆண்களுக்கான அனைத்து றெடிமேட் வகைகளுக்கும் அடங்கலாக விசேட தரமானது
பிளேன் அன் ஸ்ரிப், லோங்சிலிப், சோட்சிலிப் சேட், ~~1375~~/= 700/=
போய்ஸ் சேட் லோங்சிலிப், சோட் சிலிப் சேட் ~~700~~/= 400/=
டெனிம் ரவுசர்கள், ஏனைய ரவுசர்கள், சோட்சிலிப் பிறிண்ட் சேட் ~~700~~/= 500/=

ஆடவருக்கான சேட் வகைகள்
★Woods Vally ★Caruen (Paris) ★Alain Philippe ★True Knight ★Inzio (Swiss Cotton) ★Pierri Carlo ★Perri Allcn ★London Groovs (Cool Ventilated) ★Jordi

3) 1ஆம் மாடி நங்கையருக்கான சோளிகிட், சுரிதார் அடங்கலாக
4) 1ஆம் மாடி சிறுவர்களுக்கான அனைத்து றெடிமேட் ஆடை வகைக்ள்
5) 2ஆம் மாடி சகலவிதமான பென்ஷி ரகங்கள் அடங்கலாக ரவலிங் பேக், றோல்கோல்ட், பான்ஷி, சாறி காப்பு கொலோன் வகை, பேபி நீட்ஸ்ரகங்கள் அனைத்தும் வசதியாக பார்த்து தெரிவு செய்து கொள்ளலாம்.

கொலோன் வகை
Angeo, Chamle, Jasmin, Blue, Hat, Hat, Havek Sky, Cigar, Kes Kala, Boss

பவுடர் வகை, கிறீம் வகை
Tara, Voodoo, Ponds, Emami, Jasmin , Sandal

றோல்கோல்ட் ஆபரணங்கள்
Fair & Lovly , Fair Evre, Fair & Hand Some , Cucumber, Nycil, Nevia

G.S.LINGANATHAN & CO
13,14 GRAND BAZAAR 47, GRAND BAZAAR JAFFNA

(C-1159)

# அனைத்துலகக் கடும்போக்கும்

**பூநகரி, மன்னார் இடையே பயணிக்கும் ஏ32 நெடுஞ்சாலை பாக்குநீரிணைக்கு சாமாந்தரமாக செல்வதனால் அதன் முக்கியத்துவம் அதிகமானது என்பது அரசின் கணிப்பு.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் மீண்டும் இடம்பிடிப்பதற்காக இலங்கை அரசு கடுமையாக முயன்று வந்ததுடன், அதற்கு இந்தியா, சீனா போன்ற நாடுகளும் ஆதரவு வழங்கியிருந்தன. இருந்தபோதும் இறுதியில் இலங்கை தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமை சபையில் இருந்து இலங்கையை தள்ளிவைக்குமாறு நோபல் பரிசு வென்ற அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி காட்டர், தென்ஆபிரிக்கா பேராயர் டெஸ்மன்ட் ருட்டு, ஆர்ஜென்ரீனாவை சேர்ந்த அடோல்ப் பரேஸ் எஸ்குவல் ஆகியோர் உட்பட பல மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகளும், தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கோரிக்கைகளை விடுத்திருந்தனர்.

ஐ.நா. மனித உரிமை சபையில் இருந்து இலங்கை நிராகரிக்கப்பட்டது, ஐ.நாவின் உறுப்புரிமை நாடுகள் தமது அங்கத்துவ நாடுகளின மனித உரிமை செயற்பாடுகள், தகுதிகள் தொடர்பாக கடுமையான போக்கை கடைப்பிடிப்பதில் உறுதியாக உள்ளதை காட்டுகின்றது என அரச சார்பற்ற நிறுவனங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

வேண்டும் என மருத்துவ நிபுணர்கள் கூறிய போதும், தீவிர சிகிச்சைக்கு பின்னர், அந்த முடிவு பின்னர் மாற்றப்பட்டது. அவரின் முக்கியத்துவம் உணர்ந்து விடுதலைப்புலிகளும் அதற்கு சம்மதிக்கவில்லை. பின்னர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட அவருக்கு போர் நிறுத்த காலத்தில் சிங்கப்பூரில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டிருந்தது.

அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் அதிகாரிகள் பயிற்சிக் கல்லூரியின் திட்டமிடல், தாக்குதல் உத்திகளை பயிற்றுவித்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்த பிரிகேடியர் பால்ராஜ் உக்கிரமான களமுனைகளுக்கு சென்று ஆலோசனைகள் வழங்கி வந்ததுடன், தாக்குதல் திட்டங்களுக்கான தீவிர பயிற்சிகளையும் வழங்கி வந்திருந்தார்.

இந்த வருட ஆரம்பத்தில் இருதய நோயினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அவர், கடந்த மூன்று மாதங்களாக மருத்துவ மனை



தெரிவிக்கப்படுகின்றது. மோதல்கள் உக்கிரமடைந்ததை தொடர்ந்து வான்படையின் 9 ஆவது ஸ்குவாட்ரனை சேர்ந்த எம்ஐ24 தாக்குதல் உலங்குவானூர்தி ஒன்றும் படையினரின் முன்னனி அரண்களை அண்டிய பகுதிகளில் தாக்குதல்களை நடத்தியிருந்தது.

எனினும் இந்த மோதல்களில் தமது தரப்பில் 10 பேர் கொல்லப்பட்டதாகவும், 6 பேர் காணாமல் போயுள்ளதாகவும், 15 இற்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் படைத்தரப்பு தெரிவித்துள்ளது.

தமது நிலைகளை நன்கு பலப்படுத்தி உள்ள விடுதலைப்புலிகள் இந்த பகுதியில் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருவதாகவும், நெல் வயல்களை அதிகம் கொண்ட வெளிகளினூடாக நகரும் படையினர் நேரடியற்ற சூடுகளில் அதிக இழப்புக்களை சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

தமக்கு சாதகமற்ற இடங்களை தவிர்த்து வரும் விடுதலைப்புலிகள் சாதகமான களமுனைகளில் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். இராணுவத்தி

மேலைத சன் சூ வின் உத்திகள் முக்கியமானவை. இன்றும் பல நாட்டு இராணுவங்கள் பயன்படுத்தும் உத்திகள் அவை. ஏராளமான உத்திகளில் பின்வரும் ஒரு போரியல் வியூகம் சமச்சீரற்ற போருக்கு நன்றாக பொருந்தும்.

அதாவது, *'எமது படையினரின் எண்ணிக்கை எதிரியை விட பத்து மடங்கு அதிகமானால் எதிரியை முற்றுகையிடு'*

*'எமது படையினரின் எண்ணிக்கை எதிரியை விட ஐந்து மடங்கு அதிகமானால் எதிரியை எதிர்த்து சமரிடு'*

*'எமது படையினரின் எண்ணிக்கை எதிரியை விட இரு மடங்கானால் உனது படையணியை இரண்டு பகுதியாக்கு'* என்பதுதான் அவரின் தத்துவம்.

# கடுமையான போர்முனைகளும்



யில் சிகிச்சை பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் மன்னார் மற்றும் மணலாறு களமுனைகளுக்கு தேவையான உதவிகளை வழங்கி வந்ததுடன், இடையிடையே அவற்றை சென்று பார்வையிட்டும் வந்ததாகவும் வன்னி தகவல்கள் தெரிவிக்கின்றன.

2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வடமராட்சி கிழக்கின் குடாரப்பில் தரையிறங்கிய பால்ராஜ் இரண்டு பற்றாலியன் சிறப்பு படையினருக்கு எதிராக ஆனையிறவு சமரை வழிநடத்தியது, விடுதலைப்புலிகளின் போரியல் ஆளுமை தொடர்பாக தெற்காசியா கண்டத்தில் பாரிய ஆச்சரியத்தை தோற்றுவித்திருந்தது. இதனிடையே வடபோர் முனையில் இந்த வாரம் மோதல்கள் மந்த நிலையை அடைந்துள்ளன. கடந்த 18ஆம் திகதி ஞாயிற்றுகிழமை மன்னார் களமுனையின் வடமுனையில் இடம்பெற்ற உக்கிர மோதல்களைத் தொடர்ந்து இந்த மந்த நிலை தோன்றியுள்ளது.

இவற்றைவிட வழமையாக உதட்டில் கவலைகளையும், உள்ளூர இலங்கைக்கான ஆதரவுகளையும் வழங்கி வந்த மேற்குலகத்தின் நழுவல் போக்கில் ஏற்பட்ட மாற்றமே இலங்கையின் தோல்விக்கு மற்றுமொரு காரணம். இலங்கை அண்மையில் ஏற்படுத்திவரும் புதிய கூட்டணிகள், தெற்காசிய பிராந்தியத்தில் ஏற்படப்போகும் முனைவாக்கம் என்பன இலங்கையின் முன்னைய நழுவல் போக்குகளுக்கு சாவுமணி அடித்துள்ளது.

உலக ஒழுங்கில் இலங்கை அந்நியப்படுத்தப்பட்டு வருவது அதிகரித்து வருகையில் இலங்கையின் களநிலைமைகளும், அரசியல் நிலைமைகளும் மீண்டும் ஒரு நெருக்கடியான கட்டத்தை தொட்டுள்ளன.

வன்னியில் விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான பிரிகேடியர் பால்ராஜ் மாரடைப்பினால் மரணமடைந்ததனால், வன்னிப் பகுதி சோகமயமாகி உள்ளது. மேலும் புலம்பெயர் நாடுகளிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

விடுதலைப்புலிகளின் போரியல் வரலாற்றில் பல தளபதிகளின் வரலாறுகள் பதிவாகி இருந்தாலும், பால்ராஜ் இன் போரியல் அனுபவம் வேறுபட்டது. இந்திய இராணுவத்தின் முற்றுகை காலத்தில் மணலாற்றில் நடைபெற்ற சமரில் இருந்து, தற்போது வரையிலும் அவரின் போரியல் அனுபவங்கள் மிக மிக அதிகம்.

1990 களில் நடைபெற்ற மாங்குளம், கொக்காவில் படைமுகாம்கள் தகர்ப்பு, 1991 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட ஆகாய கடல் வெளி சமர், 1993 களில் மேற்கொள்ளப்பட்ட மண்கிண்டி படைமுகாம் தகர்ப்பு, 1993 ஆம் ஆண்டு,நவம்பர் மேற்கொள்ளப்பட்ட பூநகரி படைமுகாம் தகர்ப்பு, அதற்கு முன்னர் நடைபெற்ற யாழ்.தேவி படை நடவடிக்கை முறியடிப்பு, 1995 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட புலிப்பாய்ச்சல் நடவடிக்கை, 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற முல்லைத்தீவு முகாம் தகர்ப்பு (ஓயாதஅலைகள் 01), 1998 ஆம் ஆண்டு நடைபெற்ற பரந்தன் ஆட்டிலறி பீரங்கித்தளம் மீதான ஊடறுப்புச் சமர், 1998 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் செப்ரம்பரில் நடைபெற்ற கிளிநொச்சி தளம் தகர்ப்பு (ஓயாத அலைகள்2), 1999 ஆம் ஆண்டு மேற்கொள்ளபபட்ட ஓயாதஅலைகள்03, 2000 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆனையிறவு பெரும் தளம் தகர்ப்பு, 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தீச்சுவாலை முறியடிப்பு என்பன பிரிகேடியர் பால்ராஜ் வழிநடத்திய மற்றும் முக்கிய பங்கு வகித்த சமர்களில் முக்கியமானவை.

பூநகரி முகாம் தகர்ப்பில் அவர் காயமடைந்த போது அவரது காலை அகற்ற

கடந்த 18 ஆம் திகதி அதிகாலை இராணுவத்தின் 58 ஆவது படையணியின் 3 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த 3 பற்றாலியன் இராணுவத்தினர் கேணல் சுராஜ் பன்சஜய தலைமையில் இருக்கண்டல்குளம் ஊடாக வண்ணாங்குளம் நோக்கி நகர முற்பட்ட போது கடுமையான சமர் வெடித்திருந்தது.சத்தமின்றி நகர்ந்து விடுதலைப்புலிகளின் நிலைகளை கைப்பற்றும் நோக்குடன், அதிகாலை 3.30 மணியளவில் படையினர் நகர்வை ஆரம்பித்த போது, படை சிப்பாய் ஒருவர் ஜொனி மிதிவெடியில் சிக்குண்டதால் படையினரின் திட்டம் திசை மாறியதுடன், மோதல்களும் ஆரம்பித்தன.

விடுதலைப்புலிகளின் அணிகள் சிறு ஆயுதங்கள் கொண்டு நேரடியாக மோதியதுடன, 120 மி.மீ, 81 மி.மீ மற்றும் 60 மி.மீ ராகவன் மோட்டார்களும், 122 மி.மீ பீரங்கிகளையும் அவர்கள் பயன்படுத்தியதாக படைத்தரப்பு தெரிவித்துள்ளது. இராணுவம் 153 மற்றும் 122 மி.மீ பீரங்கிகள், 122 மி.மீ பல்குழல் உந்துகணை செலுத்திகளை செறிவாகப் பயன்படுத்தியிருந்தது. எனினும் வயல் வெளிகளுக்கு ஊடாக நகர்ந்த படையினர் இந்த தீவிர தாக்குதலில் நிலையெடுக்க முடியாது போய்விட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த மோதல்களில் 26 இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், 50இற்கு மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் 6 இராணுவத்தினரின் சடலங்களும், இரு ஆர்.பி.ஜி உட்பட பெருமளவான ஆயுதங்களும் தம்மால் கைப்பற்றப்பட்டதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளனர். தமது தரப்பில் 3 பேர் பலியானதாகவும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தேடுதல்கள் தொடர்வதாகத் தெரிவித்த விடுதலைப்புலிகள் பின்னர் 22 ஆம் திகதி வியாழக்கிழமை இராணுவத்தினரின் மேலும் 3 சடலங்களும், ஒரு தொகுதி ஆயுதங்களும் மீட்கப்பட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே கருங்கண்டல் ஊடாக இராணுவத்தின் 58 ஆவது படையணியின் 2 ஆவது பிரிகேட் படையினர் வண்ணாகுளம் நோக்கிய நகர்வை மேற்கொண்டிருந்தாகவும்

னரை பொறுத்தவரையில் இந்த நடவடிக்கையின் இலக்கு என்ன என்பது தொடர்பாக தெளிவாக தெரிவிக்காத போதும், ஏ32 வீதியை படிப்படியாக கைப்பற்றி பூநகரியை கைப்பற்றுவதே நீண்டகாலத் திட்டம்.

பூநகரியை பொறுத்தவரையில் யாழ். கடல் நீரேரியை மையமாகக் கொண்டு அமைந்துள்ளதனால் அதன் முக்கியத்துவம்

**உதட்டில் கவலைகளையும், உள்ளூர இலங்கைக்கான ஆதரவுகளையும் வழங்கி வந்த மேற்குலகத்தின் நழுவல் போக்கில் ஏற்பட்ட மாற்றமே இலங்கையின் தோல்விக்கு மற்றுமொரு காரணம்.**

அதிகமானது. அதில் இருந்து கிழக்கு நோக்கிய நெடுஞ்சாலை பரந்தன் கிளிநொச்சிக்கும், மேற்கு நோக்கிய நெடுஞ்சாலை மன்னாருக்கும் செல்வது கேந்திர முக்கியத்துவம் மிக்கது.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி நோக்கி மேற்கொள்ளப்பட்ட சத்ஜெய படை நடவடிக்கை மற்றும் முல்லைத்தீவு முகாம் தாக்குதலின் எதிரொலி போன்றவற்றினால் பூநகரி முகாம் அரசினால் கைவிடப்பட்டபோது தென்னிலங்கை படைத்துறை ஆய்வாளர்கள் மத்தியில் பெரும் விமர்சனங்கள் தோன்றியிருந்தன. எனினும் கிளிநொச்சியை கைப்பற்ற போகின்றோம் என்ற அரசின் அறிவித்தல் அதனை ஓரளவு தணித்திருந்தது.

பூநகரி மன்னார் இடையே பயணிக்கும் இந்த ஏ32 நெடுஞ்சாலை பாக்குநீரிணைக்கு சாமாந்தரமாக செல்வதனால் அதன் முக்கியத்துவம் அதிகமா னது என்பது அரசின் கணிப்பு. வன்னி நிலப்பரப்பின் மேற்குப்புறம் இந்த பகுதியினூடாக கடலுடன் நேரடி தொடர்புகள்ள கொண்டுள் ள தும், அதனால் விடுதலைப்புலிகளுக்கு பெரும் அனுகூலங்கள் உள்ளன என்பதும் படைத்தரப் பின் வாதம்.



இதனை கைப்பற்றுவதன் மூலம் விடுதலைப் புலிகளினதும், வன்னி மக்களினதும் நகர்வுகளை முடக்கி விடலாம் என்பதும் படைத் தரப்பின் உத்தி. இந்த கடற்பரப் பின் ஆழமற்ற தன்மை கடற்படை யினரின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தி வருவதாகவும் படைத தரப்பு தெரிவித்து வந்துள்ளது.

எனவே தான் ஏ9 நெடுஞ்சாலையை கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட வெற்றி நிட்சயம் படை நடவடிக்கை போன்று, ஏ32 நெடுஞ்சாலையை கைப்பற்றும் பெயரிடப்படாத படை நடவடிக்கை நோக்கி படையினர் மெல்ல மெல்ல நகர்ந்து வருகின்றனர். நெல் விளையும் பேழை எனப்படும் இந்தப் பூமியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுவரும் படை நடவடிக்கையானது அங்கு வாழும் மக்களின் விவசாயத்திலும் அதிக பாதிப்புக்களை ஏற்படுத்துவதுடன், ஏற்கனவே பெருளாதார தடைகளினால் அல்லலுறும் மக்களுக்கு மேலதிக அழுத்தங்களையும் ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆனால் ஏறத்தாழ 60 கி.மீ நீளமான இந்த சாலையை கைப்பற்றவும், அதனை தக்கவைக்கவும் படையினரின் வளங்கள் போதுமா என்ற கேள்விகள் எழாமல் இல்லை. வெற்றி நிச்சயம் படை நடவடிக்கை கற்று கொடுத்த பாடமும் அது தான்.

போரியல் உத்திகளில் சீன போரியல்

சமரும், எதிர்ச்சமரும் விரிவாக்கம் பெறும் களமுனைகளும் இதன் அடிப்படையில் தான் இடம்பெற்று வருகின்றன. இராணுவம் பயன்படுத்தும் உத்திகளும் இவை தான். அதாவது பல முனைகளைத் திறப்பதன் மூலம் விடுதலைப்புலிகளின் படை வளத்தை திசை திருப்பி விடலாம் என்பது அவர்களின் கணிப்பு.

ஆனால் விடுதலைப்புலிகளும் அதற்கேற்ப களங்களை விரிவுபடுத்தியே வருகின்றனர், அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்ற தேர்தலுடன் அங்கு ஆரம்பித்த தாக்குதல்கள் தீவிரமடைந்தே வருகின்றன.

கொழும்பு லோட்டஸ் வீதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு, தென்னிலங்கையின் புத்தல பகுதியில் நடை பெற்ற தாக்குதல், அம்பாறையில் நடை பெற்ற தாக்குதல்கள் என களமுனைகளின் விரிவாக்கம் அதிகம்.

களமுனைகளின் இந்த விரிவாக்கத்திற்கு மத்தியில், கிழக்கில் வன்முறைகள் வெடித்துள்ளன.

அரச தரப்பு வெற்றியீட்டி உள்ளது என்ற ஒரு தோற்றப்பாட்டை எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக அரசு எதிரும் புதிருமான இரு அமைப்புக்களுடன் கூட்டணி சேர்ந்திருந்தது. அதன் பலாபலன்களே தற்போது கிழக்கில் எதிரொலிக்க ஆரம்பித்துவிட்டன.

மூவின மக்களும் வாழும் இந்த பிரதேசத்தில் நடைபெற்ற மாகாணசபை தேர்தலும், அதில் போட்டியிட்டவர்களும் எரியும் நெருப்பில் எண்ணையை அள்ளி ஊற்றிய வேலையை தான் செய்துள்ளனர்.

இந்த வன்முறைகளின் தார்ப்பரியத்தை மாகாண சபை தேர்தல் முடிந்தகையுடன் அமெரிக்கா மிக அழகாக எடுத்து கூறியிருந்தது.

**வேல்ஸிலிருந்து அருஷ்**

அதாவது மக்கள் தமக்கு விருப்பமான நிர்வாகத்தை தேர்ந்தெடுக்க முடியாது போனதால் கிழக்கில் புதிதாக வன்முறைகள் உருவாகலாம் என்ற கவலை தோன்றியுள்ளதாக அமெரிக்கா தெரிவித்திருந்த கருத்துக்கள் தற்போதைய சூழ்நிலைக்கு நன்றாகப் பொருந்துவதாகவே உள்ளன.

# எண் சோதிடம்



(சென்றவாரத் தொடர்ச்சி)

63 .இதுவும் அதிர்ஷ்டகரமான எண்தான். ஆனால் இந்த எண் பெயராக வந்தால் புத்தி நல்ல விஷயங்களில் செல்லாது தவறான காரியங்களில் தான் புத்தி செல்லும். இது திருடர்களுக்கே உகந்ததென நூல்களில் காணப்படுவதால் இத்துடன் விட்டு விடுகிறேன்.

72. 9 எண்களிலேயே இதை மிகவும் சிறந்ததாகக் கருதலாம் இதனால் குறிக்கப்படுபவர் பால்யத்தில் சிரமப்பட்ட போதிலும் பின்னர் றொம்பவும் சுகப்படுவார்.

சந்தேகங்களை நீக்கினால் சுகமுண்டாகும். இவரால் தேடப்படுகின்ற சொத்துக்கள் பல தலைமுறைகளுக்கும் அழியாமல் இருக்கக் கூடியது.

பணம் வந்துகொண்டே இருக்கும் . போய்விடாது. (வியாபாரிகள் கவனிக்க வேண்டிய எண் ) புகழும் உண்டு . இவ்வெண் நிலையான ஐஸ்வர்யத்தைக் குறிக்கிறது.

இவ்வெண் அதிஷ்டகரமான வாழ்க்கையைக் குறிக்கிறது . முன்னேற்றமும் கீர்த்தியும் பொருளும் கிட்டும். ஆனால் ஜாக்கிரதையாக இல்லாவிடில் அதிர்ஷ்டம் மாறிவிடும். பலருக்கு ஆசிரியராக இருக்கும் வாய்ப்பு உண்டாகும்.

90. இந்த எண் 9 எண்ணிற்குப் பூரண பலத்தைக் கொடுப்பதாக இருப்பதால் இதனால் குறிக்கப்படுபவர் தன் காரியத்தை சாதித்துக்கொள்ள அசுரப் பிரயத்தனம் செய்வார்கள். வெற்றி நிச்சயம் ஐஸ்வர்யத்தில் குபேரனைப் போல ஆவார்கள். புகழும் உண்டாகும்.

அருள் நாட்டமுடையவர்களுக்கு இவ்வெண் விரும்பத்தக்கதல்ல.

99.இவ்வெண் பெயராக வந்தால் புத்தியைத் தவறான வழிகளில் செலுத்தும். வெற்றியுடன் விரோதங்களும் உண்டாகும். எதிரிகளால் தாக்கப்படுவதைக் குறிப்பதால் இது விசேஷமான எண்ணல்ல. (கல்வி . பொருள் சுகம் உண்டு.)

108. இவ்வெண் பெரிய பதவிகளையும் காரிய சித்தியையும் தரவல்லது. எண்ணிய படியே எல்லாம் முடியும் நல்ல முயற்சிகளையும் அதற்கொத்த பலன்களையும் தருவதால் இதை மிக்க அதிஷ்டகரமானதாகக் கருதலாம்.

அசாத்தியமான சரீரப் பிரயாசை தேவையான காரியங்களில் ஈடுபடுவார்கள். இவர்களே. பல தேசங்களை சைக்கிளிலேயே சுற்றி வருதல் , கால்நடையாகவே பிரயாணம் செய்தல், பல மைல்கள் நீந்துதல் , மலை ஏறுதல் முதலிய காரியங்களில் ஈடுபடுவார்கள். பெயர் எண் 9 வந்தாலும் இப்படியான காரியங்களில் ஈடுபடுத்தும்.

**அதிர்ஷ்ட காலம் :** 9 எண்ணின் கீழ் பிறந்தோருக்கு மிக்க அதிர்ஷ்டகரமான தினங்களாவன: 5,14,23 ,9 18,6 ,15,24, 21,30 திகதிகள் . இத்தினங்கள் முன்னேற்றமளிக்கும். முக்கியமான காரியங்களை இத்தினங்களிலேயே வழக்கமாகச் செய்து வரவும்.1 ,10 திகதிகளும் சாதகமானவையே 27ஆம் திகதிகளில் நல்ல பலன்கள் நடைபெறும்.

**துரதிர்ஷ்ட தினங்கள் :** 2,11 , 20,29 திகதிகளே. 19ஆம் திகதியிலும் சில சமயங்களில் ஒரு தவறான யோசனைகள் மனதில் உதிக்கும் இத் தினங்கள் குழப்பத்தை உண்டு பண்ணக் கூடியவையானதால் இத்தினங்களில் முக்கிய காரியங்களில் ஈடுபடவேண்டாம்.

**வர்ணம்:** இவர்களுக்கேற்ற வர்ணம் சிவப்பும். கருஞ்சிவப்பும், நீலம் கூட பொருந்தும்.

**உபயோகப்படுத்தக்கூடாதவை :** வெளிரான பச்சை மற்ற வெண்மை மிகுந்த வர்ணங்கள்

ஆடைகளில் கரையிலாவது செந்நிறம் இருப்பது நலம்.

## பண்டிட் ஸேதுராமன்

**இரத்தினம்:** ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் தந்து சரீர குற்றங்களை பவளம் நீக்கும். குடலில் ஏற்படக் கூடிய கட்டிகள் முதலியவை வராமல் தடுப்பவை பிளட் ஸ்டோன் (Blood Stone) எனப்படும். இரத்தம் போன்ற சிவப்பு புள்ளிகள் கொண்ட பச்சை நிறக்கற்களே .

சப்தங்களின் சேர்க்கையையும் முடிவையுமே இவ் வெண் குறிப்பதால் தனித்து ஒரு எழுத்துக்கும் 9 எண்ணிக்கை கிடையாது.

9, 18,27 திகதிகளில் பிறந்த சில பிரசித்த மனிதர்கள்.

| பெயர் | பிறந்த திகதி | எண்கள் |
| --- | --- | --- |
| வி.எம்.மொலாட்டொவ் | 9.3.1890 | 9&3 |
| அமெரிகோ வெஸ்புகி. | 9.3.1451 | 9&5 |
| (இவர்தான் அமெரிக்காவைக் கண்டுபிடித்தார். அதனா லே அக் கண்டத்திற்கு அமெரிக்கா என்னும் பெயர் இடப்பட்டது.) | | |
| கால்வனி ( மின்சார சம்பந்தமான ஆராய்ச்சியைத் துவக்கியவர்) | 9.9.1737 | 9&9 |
| ஜான்மில்டன் (கவிவாணர்) | 9.12.1608 | 9&9 |
| இராமகிருஷ்ணா | 18.2.1836 | 9&12 |
| (சன்னியாசம் பெற்றுக்கொண்ட பின்னர் இராமகிருஷ்ண பரமஹம்சர் ஆனார் ) | | |
| சாமுவேல் ஜான்சன் | 18.9.1709 | 9&8 |
| கெலிலியோ | 18.2.1564 | 9&9 |
| (தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்தவர்.) | | |
| வோல்டா | 18.2.1745 | 9&1 |
| (பற்றரி,மின்சாரம் இவைகளை ஆராய்ந்துதவியவர் ) | | |

9&9 எண் கொண்டவர்களில் அநேகர் சிறந்த இராஜதந்திரிகளாக விளங்குகின்றனர்.

**ஒரு குறிப்பு:** இவர்கள் தற்காப்புக்காகக் கூட ஆயுதங்கள் வைத்துக்கொள்ளாதிப்பது நன்மை தரும். (முற்றும்)

# நுளம்புகளின் தொல்லை இல்லாதொழிய...

(சென்றவாரத் தொடர்ச்சி)

**மருத்துவ ஆலோசனை அவசியம்**

எனவே மேற்கூறிய நோய்களின் அறிகுறிகளை ஒவ்வொரு நோயாளியும் அவற்றை புறக்கணிக்காது வைத்தியரை நாடி ஆலோசனையைப் பெறுதல் அத்தியாவசியமானதாகும்.

இதைத் தவிர நோயாளிகள் போதிய அளவு ஓய்வெடுப்பதுடன் தமது உணவுப் பழக்கத்தில் கட்டுப்பாடகவும் இருக்க வேண்டும்.

போதிய அளவு நீர் அருந்துவதுடன் பால், பழச்சாறு, சூப் போன்ற நீர் ஆகாரங்களை உள்ளெடுத்தல் விரும்பத்தக்கது. இதனால் நீர் இழப்பு ஈடு செய்யவும் காய்ச்சலினால் ஏற்படும் தாகத்தினைத் தணிக்கவும் உதவும்.

**பிற தாக்கங்கள்**

இந்நோய்கள் தவிர நுளம்புகளினால் பல சுகாதாரப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

நுளம்பு மனிதனைக் கடிக்கும் போது நோய்க் கிருமிகளை மட்டுமல்ல தனது உமிழ் நீரையும் சேர்த்து உடலினில் உட்செலுத்துவதனால் ஒவ்வாமையை ஏற்படுத்தி தோல் அரிப்பு ஏற்படுகிறது.

நுளம்பு கடித்த இடத்தில் ஆரம்பத்தில் நோ ஏற்பட்டு வீக்கமும் ஏற்பட்டு பின் நீலம் கலந்த சிவப்பு நிறமாக தோல் மாற்றமுற்று கலங்கள் இறக்கலாம்.

நுளம்பு கடித்த இடத்தை அமுத்துவதினால் ஏற்படும் புண்கள் மூலம் பக்ரீரியா தொற்று ஏற்பட்டு சிறுநீரக அழற்சி, செயலிழப்பு ஏற்படலாம். இதற்கு உடனடியாக மருத்துவ உதவியை நாட வேண்டும்.

HIV நோயாளிகள் நோயெதிர்ப்பு சக்தி குறைந்தோர் சில சுகதேகிகள் நுளம்பு கடிக்கு உள்ளாகும் போது கொப்புளங்கள் ஏற்படலாம். சிலரில் புண்களும் ஏற்படலாம்.

காலையில் வாகனங்களின் இரைச்சல் காதைத் துளைக்க, மாலையில் நுளம்புகளின் இரைச்சல் எமது தூக்கத்தைக் கெடுக்கின்றது.

இதனால் பலர் பகல் வேளைகளில் சுறுசுறுப்பின்றியும் குழப்பமடைந்த மன நிலையிலும் ஈடுபாடின்றியும் தமது கடமைகளை நிறைவேற்றுவதால் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இவற்றுக்கு மேலாக நுளம்புகள் பொறி முறைக் காவிகளாக தொழிற்பட்டு அசுத்தமடைந்த நீர் நிலைகள், விலங்குகளிலிருந்து மனிதனுக்கு நோய்களைப் பரப்புகின்றன . வைத்தியசாலை தோல் சிகிச்சைப் பிரிவில் Pruritico Simplex எனப்படும் நுளம்புக் கடியால் ஏற்படும் தோல் அழற்சிக்கு பலர் சிகிச்சை பெறுகின்றனர் என்பது நுளம்புகளின் பெருக்கத்தையும் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தையும் சுட்டிக் காட்டுகிறது.



தனது வரலாற்றில் பல சவால்களை எதிர் கொண்டு இப் பூமியில் ஒரு வெற்றிகரமான உயிரினமாக வாழ்ந்து வரும் மனிதனுக்கு நுளம்புகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் அச்சுறுத்தல்கள் இன்னும் வெல்லப்படாத இலக்குகளாகவே இருக்கின்றன.

இந்த வெற்றி இலக்குகளை அடைய எமது பங்களிப்பு எவ்வாறு இருக்கப் போகிறது.

**நுளம்பு ஒன்றின் பொதுவான வாழ்க்கை வட்டம்**

உயிரைக் குடிக்கும் பலநோய்களின் காவிகளாக வெவ்வேறு இயல்புகளைக் கொண்ட நுளம்பு இனங்கள் காணப்படினும் அவற்றின் வாழ்க்கைச் சரிதமானது பொதுவான சில படிகளுக்கூடாகவே நடைபெறுகின்றது.

பெண் நிறையுடலி நுளம்பானது 2-3 நாட்கள் விருத்தியின் பின் கருக்கட்டும் ஆற்றலைப் பெறுகின்றது.

இவை தமது இனப்பெருக்கக் காலத்தின் போது கருக்கட்டப்பட்ட முட்டைகளின் விருத்திக்கென் மனிதனின் அல்லது விலங்குகளின் குருதியை உணவாக உட்கொள்கின்றன.

இதன்போது நீரின் மேற்பரப்பில் விருத்தியடைந்த கருக்கட்டப்பட்ட முட்டைகள் ஏறத்தாழ 80-120 வரை இடப் படும்.

இவற்றுள் அனோ பீலிஸ். ஏடிஸ் இன நுளம்புகள் தனித் தனியாகவும் கியூ லெக்ஸ் இன நுளம் புகள் கூட்டமாகவும் முட்டைகளை இடு கின்றன.

இம் முட்டைகளில் இருந்து 2-3 நாட்களின் பின் குடம்பிகள் வெளிவரும்.

உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**நுளம்புடன் ஒரு குருஷேத்திரம்**

முற்றுமுழுதாக யாழ்.மண்ணில் ஒளிப்பதிவு செய்யப்பட்ட ஓர் அரிய விபரணச் சி த்திரமாக

- ❖ நுளம்பால் பரவும் நோய்கள் பற்றியும்
- ❖ நுளம்புகளைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும்

நிறைவான விளக்கத்துடன் ஓர் ஒலி-ஒளி இறுவட்டாக வெளியிடப்படவுள்ளது.

இடம் :- கைலாசபதி கலையரங்கம், யாழ்.பல்கலைக்கழகம்.
காலம் :- 01.06.2008. காலை 9.30 மணி.
வெளியீடு :- குழு IV, 26 ஆம் அணி, யாழ்.மருத்துவபீடம்.

நீரின் மேற்பரப்பிற் காணப்படும் குடம்பிகள் தகுந்த வெப்ப நிலையில் அழுகும் சேதனப் பதார்ந்தங்கள், நீர்வாழ் நுண்ணுயிர்களை உணவாக உள்ளெடுத்து வளர்ந்து 5-7 நாட்களின் பின் கூட்டுப் புழுவாக மாறுகின்றது.

இக் கூட்டுப்புழுக்கள் உணவுட்கொள்ளாது ஓரிரு நாட்களில் பின் உருமாற்றமடைந்து நிறைவுடலி நுளம்பாக நீரை விட்டு வெளியேறுகின்றன.

ஆண், பெண் நிறையுடலி நுளம்புகள் தாவரச்சாற்றினையே உணவாக பயன்படுத்துகின்றன.

இவை கடல் மட்டத்திலிருந்து 1500 அடி வரை பறக்கக் கூடியனவாய் இருப் பினும் 28 - 30$^{C}$ வெப்பநிலை கிடைக்கா விடின் இறந்து போகக் கூடியன.

முதிர்ச்சியடைந்த ஆண் பெண் நிறையுடலிகள் தம்மிடையே புணர்ச்சியிலீடு பட்டு முட்டைகளை உருவாக்கி தமது இனத் தொடர்ச்சியை உறுதி செய்கின்றன.

எனவே காலத்துக்குக் காலம் ஏற்பட்ட எத்தனையோ சவால்களை முறியடித்து முன்னேறியநாம் பிளேக், அம்மை நோய் போன்ற கொடிய நோய்களுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் அளவிற்கு முன்னேறிய நாம் என்றோ. எப்பொழுதோ ஆரம்பமாகிய நுளம்பின் சவால்களை இன்னும் வெற்றி கொள்ள முடியாதிருப்பது வேதனைக்குரியதே!.

இந்தச் சின்னஞ்சிறு நுளம்புகள் துப்பாக்கி தூக்காது அதன் தும்பிக்கை கொண்டு பல மில்லியன் மனித உயிர்களை வீழ்த்தியிருக்கின்றன மேலும் வீழ்த்திக் கொண்டிருக்கின்றன!

இன்னும் எத்தணை காலம் தான் இது தொடரப் போகின்றது?நுளம்புகளின் பெருக் கத்திற்கு தடையாய் இருக்க வேண்டிய நாம் அதனை முற்றாக அழித்தொழிக்க வேண்டிய வரலாற்றுக் கடமையைக் கொண்டுள்ள நாம் இன்னும் அதன் தாக்கத்தால் இறந்து போகும் ஓர் ஆரம்பப் பிறப்புப்போல் நாளைய எம் சந்ததிக்கும் இந் நோய்களை விட்டுச் செல்லும் கையாலாகாதவர் போல் இருப்பது ஏன்?

இதற்கான விடை எமது கைகளிலே உள்ளது.

நுளம்புகளின் வாழ்க்கை வட்டத்தின் ஒவ்வொரு நிலையினதும் தொடர்ச்சியை ஒரே சமயத்தில் ஒருங்கிணைந்த முறையில் கட்டுப் படுத்தின் நுளம்பால் பரவும் நோய் களையும் அவற்றையும் இல்லாதொழிக்க முடியும்.

(தொடரும்)

அயலான் வீட்டை நீ உலுக்கினால் உன் வீடு சீக்கிரம் உன் தலையில் விழும்

—சுவிட்ஸர்லாந்து

வலம்புரி

# மிலேச்சத்தனமான மனிதப் படுகொலைகள்

மல்லாவி-முறிகண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் ஆறு சிறுவர்கள் உட்பட பதினாறு அப்பாவிப் பொது மக்கள் பலியாகியுள்ளனர்.

பொதுமக்களை இலக்குவைத்து நடத்தப்பட்ட இத் தாக்குதல் சம்பவத்தை மனித நேயம் மிக்க எவரும் கண்டிக்கத் தவறமாட்டார்கள்.

யுத்தம் எங்கு நடந்தாலும், அதில் யார் ஈடுபட்டாலும் பொதுமக்கள் மீதான தாக்குதல் நிறுத்தப்பட வேண்டும். பொதுமக்களை பாதுகாக்கத் தவறும் நடவடிக்ல்ககள் எவையும் மனித சமூகத்திற்கு எதிரானவை என்பது உணரப்பட வேண்டும்.

முறிகண்டியில் வாகனத்தில் பயணம் செய்தவர்கள் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதல் ஆனது இலங்கையில் மிக மோசமான சூழ்நிலை தோன்றியிருப்பதையே சுட்டிக் காட்டுகின்றது.

தாக்குதல் சம்பவத்தில் ஆறு சிறுவர்கள் பலியாகிப் போயினர். அவர்கள் இழைத்த குற்றந்தான் என்ன?

சிறுவர் உரிமைகள் பற்றி உலக நாடுகள் நாளுக்குநாள் சட்டங்களையும், சாசனங்களையும் உருவாக்கி வருகின்றன. இந்தச் சட்டங்களும் சாசனங்களும் குழந்தைகள் மீது-சிறுவர்கள் மீது சிறு தண்டனையும் விதிக்கப்பட்டு விடக்கூடாதென்பதற்கானதாகும்.

ஆனால் இலங்கையில் சிறுவர்கள் அநியாயமாக பலியெடுக்கப்படுகிறார்கள். இது உடனடியாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும். ஆட்சியில் இருப்பவர்கள் பொறுப்பற்று இருந்தால் பொது மக்கள் பலியாவது சர்வ சாதாரணமானதாகி விடும்.

பொதுமக்களின் பாதுகாப்பு நாடுபூராகவும் இருத்தல் வேண்டும். ஆனால் தமிழர் பகுதியில் பொதுமக்கள் உயிரிழந்தால் அதற்கோர் நீதியும், தென்பகுதியில் பொதுமக்கள் உயிரிழந்தால் இன்னோர் நீதியும் நம் நாட்டில் நடக்கின்றது.

முறிகண்டியில் 16 பொதுமக்களை பலியெடுத்த இந்த துயரச் சம்பவம் தென்பகுதியில் கூட வேறு விதமாகவே விளக்கமளிக்கப்பட்டிருக்கும். இதுவே இலங்கையில் நீண்ட காலம் நடந்து வரும் பாரம்பரியம்.

விமானத் தாக்குதல்கள் இடம்பெறும்-அப்பாவிப் பொதுமக்கள் அந்த விமானத் தாக்குதலில் பலியாவர்கள்- ஆனால் அதற்கான விளக்கமும், வியாக்கியானமும் வேறுவிதமாக இருக்கும். இதனால் தமிழர் பகுதியில் இடம்பெறும் அவலங்களையும் அநீதிகளையும் சிங்கள மக்கள் அறிந்து கொள்ளமுடியாமல் போகின்றது.

நாட்டில் நடக்கும் நிகழ்வுகளை உள்ளவாறு அறிந்து கொள்ளும் உரிமை பொதுமக்களுக்கு உண்டு. எனினும் இந்த உரிமையை அரசு திட்டமிட்டு மறைக்கிறது. இந்நிகழ்வு கூட யுத்தம் நீடிப்பதற்கு காரணமாக அமையும்.

எனவே இலங்கைத் திருநாட்டில் பொதுமக்கள் உயிரிழப்பதைத் தடுக்க சமாதான சூழ்நிலையை ஏற்படுத்துவதே ஒரே வழியாகும்.

# தொலைந்த அடையாள அட்டைகளை ஒரு நாளில் வழங்கும் சேவை இடைநிறுத்தம்

(கொழும்பு)



தேசிய அடையாள அட்டை தொலைந்தால் அதனை மீண்டும் ஒருநாளில் பெற்றுக்கொள்ளும் சேவையை உடனடியாக நிறுத்துமாறு பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்.

1968-32இலக்கச் சட்டத்துக்கு அமைய இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை மீறி செயற்பட்டால் ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு எதிராகப் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுப்பார்கள் என ஆணையாளருக்கு பிரதமர் கூறியுள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகள் உள்ளிட்ட குற்றச் செயல்களுக்கு போலியான தேசிய அடையாள அட்டைகள் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனத்தில் கொண்டு நாட்டின் தேசிய பாதுகாப்பின் மீதான அக்கறையுடன் இந்தப் புதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஆட்பதிவுத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் மற்றும் நாட்டின் புலனாய்வு அதிகாரிகளுடன் நடத்திய சந்திப்பின் பின்னரே பிரதமர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாகவும் சட்டவிரோதமான ஆள் அடையாள அட்டைகள் வழங்குவதைத் தடுப்பது தொடர்பாகவும் இந்தச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ஓ-5)

# இலங்கை பொதுநலவாய ஒன்றியத்தின் உறுப்புரிமையையும் இழக்க நேரிடும்

## ஜயலத் ஜெயவர்த்தனா குற்றச்சாட்டு

(கொழும்பு)



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் உறுப்புரிமையைத் தக்க வைத்துக் கொள்ள இலங்கை தவறியிருப்பதால் வெளிநாட்டு உதவிகள் கிடைக்காமல் விடுவதற்கான அபாயம் காணப்படுவதாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் நிறுத்தப்படாமல் தொடர்ந்தும்இடம் பெற்று வருவதாக ஊடகவியலாளர் மாநாட்டில் சுட்டிக் காட்டிய ஐக்கிய தேசியக் கட்சி யின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன, இனியும்மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்தாவிட்டால் இலங்கை பொதுநலவாய ஒன்றியத்தின் உறுப்புரிமையையும் இழக்க நேரிடும் எனக் கூறியுள்ளார்.

சர்வதேச நாடுகளைத் திருப்திப்படுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கான ஆசனத்தை தக்கவைத்துக்கொள்வதற்கு வெளி விவகார அமைச்சர் ரோகித்த போகொல் லாகம மற்றும் மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஆகியோர் தவறிவிட்டார்கள் எனவும் ஜயலத் ஜயவர்த்தனா குற்றம் சாட்டினார்.

சர்வதேச ரீதியில் இந்த நிலைமையானது மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் மீது விழுந்த அடியாகவே கருதப்படுகிறது என்றார் அவர்.

இதே வேளை ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக வாக்களிக்கப்பட்டபோதும் அது இலங்கை மக்களுக்குக் கிடைத்த வெற்றியென பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்தார்.

கடத்தல்கள் , காணாமல் போதல்கள், கைதுகள், படுகொலைகள் போன்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் பாரியளவில் இலங்கையில் இடம் பெற்று வருகின்றன என்பதை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டிருப்பதை இந்த நடவடிக்கை எடுத்துக் காட்டியிருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார். (ஓ-5)

# உணவுக்கான உரிமையை அடிப்படை உரிமையாக பிரகடனப்படுத்துமாறு ஐ.நாவிடம் கோரிக்கை

(கொழும்பு)

உணவுக்கான உரிமையை அடிப்படைஉரிமையொன்றாகப் பிரகடனப்படுத்துமாறு கோரும் தீர்மானமொன்றை இலங்கை உள்ளிட்ட ஐ.நா. நாடுகளின் 34 உறுப்பு நாடுகள் சமர்ப்பித்துள்ளன.

ஜெனிவாவில்உள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையில் கடந்த புதன்கிழமை இடம் பெற்ற கூட்டத் தின் போதே இந்தத் தீர்மானமும் முன்மொழியப்பட்டது.

ஐக்கிய நாடுகள்சபை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் உணவுக்கான உரிமையை அடிப்படை உரிமையாகக் கருதி மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தத் தீர்மானத்தில் கோரப்பட்டுள்ளது.

மக்களின் இந்த உணவுக்கான உரிமையைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் இதன் போது தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கையின் வர்த்தக விவகாரங்களுக்கான குழுவின் பிரதிச் செயலாளர் ருவந்தி ஆரியரெத்தினவும் கலந்து கொண்டிருந்தார்.

தற்போதைய உலக உணவு நெருக்கடி இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்து அவர் இந்தக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார். (அ-7)

## மஹோற்சவம்

அருள்மிகு வில்லூன்றி வீரகத்தி விநாயகர் திருக்கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 1ஆம் திகதி வேட்டைத்திருவிழாவும் 2ஆம் திகதி திங்கட்கிழமை தேர்த்திருவிழாவும் 3ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம் பெறும். (இ)

# இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழா

## பகிர்வே வாழ்வின் இன்பம்

இல்லையென்று வருவார்க்கு இல்லை'யென்று சொல்லாமல் இருப்பதைப் பகிர்ந்து வாழ்பவரே மனிதருள் மாணிக்கங்களாவர். இதையே இயேசு செய்த அப்பம் பகிர்தல் நிகழ்ச்சி நமக்கு எடுத்துக்காட்டுகிறது. இயேசு அன்று பகிர்வின் சின்னமாக விளங்கினார். அதைவிட மேலாக பிறர்வாழ இந்த சமூகம் வாழ இந்த சமூக விடுதலைக்காக தன்னுயிரை ஈபவர் தெய்வத்துள் ஒன்றாக வைக்கப்படுவர்.

இயேசுவின் திருவுடல் திரு இரத்தப் பெருவிழா இதைத்தான் நமக்கு சுட்டுகின்றது. இந்த மானுடன் மீட்புப் பெற தன் உடலையும் இரத்தத்தையும் பகிர்ந்து கொடுத்தார். நம் பெருமான் இயேசு இன்றைய நற்செய்தியின் சாரமும் இதுவே. இயேசு தன்னையே வானின்று இறங்கி வந்த உணவு என்றும் தன்னை உண்பவர் எவரும் பசியை அறியார் என்றும், அதேசமயம் அவரில் இணைந்து அவரோடு வாழ்பவர் நிலை வாழ்வு பெறுவர் என்றும் கூறுகிறார்.

இதுதான் இயேசுவின் இராவுணவு

### பரமபிதா காட்டிய பாதை

நமக்குச் சொல்லும் பாடம். இயேசுவின் கல்வாரி சிலுவை சாவுதான் இதன் அடையாளம். அந்தக் கல்வாரிப் பலியைத் தான் நாம் ஒவ்வொரு நாளும் திருப்பலியில் கொண்டாடுகிறோம்.

ஆனால் இன்று நம்மிடையே இந்தப் பகிர்வு மனம் உண்டா? இல்லையே பதுக்கும் குணம் தானே உண்டு. அப்படி யென்றால் பவுலடியார் இன்றைய 2ஆம் வாசகத்தில் கூறுவது போல் எப்படி நாம் கிறிஸ்துவின் இரத்தத்தில் பங்கு கொள்ளுதல் கிறிஸ்து வின் உடலில்பங்கு கொள்ளுதல் என்னும் தகுதியைப் பெறமுடியும்?



இயேசுவின் திரு உடல் திரு இரத்தப் பெருவிழாவும் இதைத்தான் நமக்கு பாடமாக்குகின்றது. அந்த இயேசுவின் உடலையும் இரத்தத்தையும் உண்டு குடிக்கின்ற நாமம் மறு இயேசுக்களாக வாழ்வோம். நம்மையேபகிர்ந்துபிறர்க்குஅளித்து பகிர்வின் சின்னங்களாவோம். பெறுவதை விட தருவதே இன்பமாய் கொள்வோம்.

ஜோன் ரொபேர்ட்

# பிள்ளையான் குழுவின் ஆயுதத்தை களைந்தாலே முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு; ஹிஸ்புல்லா தெரிவிப்பு



(கொழும்பு)

பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைவதன் மூலம் மட்டுமே கிழக்கில் முஸ்லிம் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று கூறுகின்றார் கிழக்கு மாகாண அமைச்சராகப் பதவியேற்ற எம்.எல். ஏ.எம்.ஹிஸ்புல்லா.

அசம்பாவிதங்களால் பாதிக்கப்பட்ட காத்தான்குடியில் மீரா ஜும்மா பள்ளிவாசலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மதியம் தொழுகையையடுத்து அங்குள்ள மக்கள் மத்தியில் கலந்துரையாடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களையச் செய்வதற்குத் தாம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இது தொடர்பாக அரசுடனும் பொலிஸ் மா அதிபருடனும் தாம் பேசியிருப்பதாகவும் அவர் கூறினார்.

காத்தான்குடியில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் கவலைக்குரியது. இச் சம்பவம் மூலம் மூன்று பேரின் உயிர்களை நாம் இழந்திருக்கின்றோம். நிலைமையை வழமைக்குக் கொண்டு வருவதற்கான ஒழுங்குகள் குறித்து நான் முதலமைச்சர் பிள்ளையானுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியிருக்கின்றேன்.

இச் சம்பவத்திற்குப் பிள்ளையான் என்னிடம் மன்னிப்புக் கோரினார். கிழக்கில் முஸ்லிம்களின் விவகாரத்தை நானும், தமிழர் விவகாரத்தைப் பிள்ளையானும் கையாள்வதற்கு நாம் எங்களுக்குள் முடிபெடுத்திருக்கின்றோம்.

மூன்று முஸ்லிம்களின் உயிர்களை நாம் இழந்துள்ளோம். முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டுள்ளமையை உணர்த்துகின்றது.

90 ஆம் ஆண்டு முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட அநீதிகளைத் தொடர்ந்து முஸ்லிம்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு ஆகியவை உறுதிப்படுத்தப்பட வேண்டியதன் தேவை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் உணரப்பட்டது.

இப்போது மீண்டும் அந்தத் தேவை உணரப்படுகின்றது. இப்போது ஏற்பட்டிருக்கும் சம்பவத்தையடுத்து நாம் பொறுமை காக்க வேண்டும். தமிழர், முஸ்லிம் உறவுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நாம் செயற்பட வேண்டும்.

பிள்ளையான் குழுவினரின் ஆயுதங்கள் களையப்பட்டு அவர்களுக்கு அரசால் பாதுகாப்பு வழங்கப்பட்டால் மாத்திரந்தான் கிழக்கில் முஸ்லிம்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும்.

அவர்களின் ஆயுதங்களைக் களைவதற்கான நடவடிக்கையில் நான் ஈடுபட்டுள்ளேன். அரசுடனும் பொலிஸ் மாஅதிபருடனும் இது தொடர்பாக நான் பேசியிருக்கின்றேன்.

அது மாத்திரமின்றி கடந்த 6 நாள்களுக்குள் 4 பொலிஸார் மட்டக்களப்பில் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இது இங்கு அசாதாரண சூழல் நிலவுவதைக் காட்டுகின்றது. பிள்ளையான் குழுவின் ஆயுதங்களைக் களைவதன் மூலமே எல்லாவிதமான பிரச்சினைகளுக்கும் தீர்வு கிட்டும்.

இதேவேளை இதே பள்ளிவாசலுக்கு நேற்று முன்தினம் மதியம் கிழக்கு மாகாண முதலமைச்சர் பிள்ளையானும் நேரில் சென்று முஸ்லிம் மக்களைச் சந்தித்து உரையாடினார்.

முதலமைச்சர் பிள்ளையான் அங்கு செல்வதற்கு முன்பே ஹிஸ்புல்லாவின் உரை முடிபுற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## எரிபொருள் விலை நேற்று...

இதன் பிரகாரம் பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி பெற்றோலின் புதிய விலை 157 ரூபாய் ஆகும். அத்துடன் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்படுகின்றது.

இதன்படி டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 110 ரூபாவாகும். இவை தவிர மண்ணெண்ணெயின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் புதிய விலை 80 ரூபாவாகும்.

ஜனாதிபதி மாளிகையில் நேற்று மாலை விசேடமாகக் கூடிய அமைச்சரவையிலேயே எரிபொருள்களின் விலையேற்றத்திற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இவ் விசேட அமைச்சரவை ஜனாதிபதியின் அழைப்பின் பேரிலேயே கூடியதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது. இதேவேளை யாழ்ப்பாணத்தில் இன்று முதல் பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 167 ரூபா 50 சதம் எனவும் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 118 ரூபா 60 சதம் எனவும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் புதிய விலை 88 ரூபா 60 சதம் எனவும் யாழ். பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

நேற்று நள்ளிரவுடன் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டமையினால் ஏழை மக்கள் மட்டுமன்றி நடுத்தர வர்க்கத்தினரும் பெரும் பாதிப்பை எதிர்கொள்வர் எனவும் இதன் தாக்கம் ஏனைய பொருள்களின் விலைகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்தும் எனவும் இதனால் நாடு மோசமான பண வீக்கத்தைச் சந்திக்கும் எனவும் பொருளியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ந-5)

## பிரிகேடியர் பால்ராஜின்...

நிகழ்வில் பொதுச் சுடரினை கடற்புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி பூரணி ஏற்றினார். நிகழ்வில் பொதுச் சுடரை மாவீரர் பணிமனை பணிமுதல்வர் பொன்.தியாகம் ஏற்றினார்.

ஈகச்சுடரினை உடன்பிறப்புக்கள் ஏற்றினர். மலர் மாலைகளை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன், வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், மூத்த உறுப்பினர் செ.வ.தமிழேந்தி, தலைமைச் செயலகச் செயலர் சீரன், தளபதி லக்ஷ்மன், தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன்,

போர்ப் பயிற்சி ஆசிரியர் தினேஷ், தளபதி கேணல் ஜெயம்,நிதித்துறைப் பொறுப்பாளர்களில் ஒருவரான குட்டி, சிறப்பு உறுப்பினர் க.வே.பாலகுமாரன், நீதி, நிர்வாகப் பொறுப்பாளர் பரா, மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் மாறன்,மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர்களில் ஒருவரான மனோஜ்,

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் சி.கரிகாலன், மகளிர் மூத்த உறுப்பினர் தீபா, புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன், தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் இளங்கோ,

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி துணைத் தளபதி அமுதாப், கடற்புலிகளின் துணைத் தளபதி விநாயகம் உள்ளிட்டோர் சூட்டினர்.

வீரவணக்க உரைகளைத் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன்,தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் ஆகியோர் நிகழ்த்தினர். (ந-5)

## ஏறாவூரில் பதற்றம்...

போதே இவர்கள் இருவரும் ஏறாவூரில் வைத்துக் கடத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான காசிம் லெப்பை (வயது-37), அப்துல் ஹாசிம் ஹனீர் (வயது-19) ஆகியோரே கடத்தப்பட்டவர்கள் ஆவர்.

முஸ்லிம் காங்கிரஸின் ஆதரவாளர்களான இவர்கள் மின்சார நிலையத்தின் ஏறாவூர்ப் பிராந்திய அலுவலகத்திற்குச் சென்றபோதே வெள்ளைவானில் வந்த சிலர் இவர்களைக் கடத்திச் சென்றதாகக் கூறப்படுகின்றது.

இந்தக் கடத்தல் குறித்து முஸ்லிம் அரசியல்வாதிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதையடுத்து அவர்கள் இவர்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டபோதும் நேற்று மாலை வரை பலன் கிடைக்கவில்லை.

இந்தக் கடத்தல் சம்பவத்தால் ஏறாவூரில் பதற்ற நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா...

நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெறும் நிகழ்வில் பங்குபற்றினார்.

யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் யாழ்.படைத்தளபதி மேஜர்ஜெனரல் மார்க் ஆகியோரும் மேற்படி நிகழ்வில் பங்குபற்றினர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துரையப்பா விளையாட்டரங்கிற்கு சென்றபோது முதலில் ஆச்சரியமடைந்த பொதுமக்கள் அமைச்சரைக் கண்ட குதூகலத்தில் அவருக்கு கைலாகு கொடுக்கவும் அவருடன் உரையாடவும் முண்டியடித்தனர் என்றும்,

நாளை 26 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பொதுமக்களையும் அரச மற்றும் தனியார் தொண்டர் அமைப்புக்களின் அதிகாரிகளையும் பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் ஊடகவியலாளர்கள் உட்பட பலரையும் நேரில் சந்தித்து பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்து மக்கள் நலன் சார்ந்த மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளவுள்ளார் எனவும் அந்த ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## எரிபொருள்...

இருந்தபோதும் நாட்டில் எரிபொருள் விலை அதிகரிப்பதாக பரவலாக குறை கூறப்படுகிறது. என்னை விமர்சிக்கும் வகையில் பத்திரிகைகளில் கேலிச் சித்திரங்களும் வரையப்பட்டு வருகின்றன. இது ஏன் என்று எனக்குத் தெரியவில்லை.

விலை அதிகரிப்பை நான் மட்டும் முடிபு செய்வதில்லை. இப்போது கூட விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.அதற்கு அமைச்சர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.எனவேதான் விலை அதிகரிக்கப்புக்கு எல்லா அமைச்சர்களும் தான் அதற்குப் பொறுப்பாளிகள் என்றார்.

இதேவேளை, லங்கா ஐ.ஓ.சி.நிறுவனம் தான் விரும்பியவாறு எரிபொருள் விலைகளை அதிகரிக்கவோ குறைக்கவோ முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (ஓ-5)

## மணலாறில்...

மோதல்மூண்டதாகப் புலிகள் தெரிவித்துள்ளனர். காலை 10 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இந்த மோதல் இடம் பெற்றது.

படையினரின் முன்னேற்ற முயற்சியை முறியடிக்கும் தாக்குதல்களை சோதியா படையணியே மேற்கொண்டிருந்தது எனவும் இதில் 5 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ரி-56 ரகத் துப்பாக்கி ஒன்று, ரவைகள் 9 ஆயிரம் உட்பட மேலும் பல ஆயுதங்களும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (ந-5)

## பதினாறு...

நிகழ்வில் பொதுச் சுடரினை தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் ஏற்றினார். 16 உடல்களுக்கு உறவுகள் சுடரேற்றி வணக்கம் செலுத்தினர்.

விடுதலைப்புலிகளின் சிறப்பு உறுப்பினர் க.வே.பாலகுமாரன் வணக்க உரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து மலர் வணக்கம் நடைபெற்றது.

பின்னர் 16 உடல்களும் பாரதிபுரம் மயானத்தில் ஒரே இடத்தில் அருகருகாக அடக்கம் செய்யப்பட்டன. பெருமளவில் மக்கள் திரண்டு அப்பாவிச் சிறார்கள் மற்றும் பொதுமக்களுக்கு இறுதி வணக்கம் செலுத்தினர். (ந-5)

## வெளிநாட்டு...

சார்பற்ற நிறுவனங்களின் போலிப் பிரசாரங்களுக்கு மனித உரிமைகள் பேரவை செவிசாய்த்துள்ளதாக இலங்கை அரசாங்கம் குற்றஞ்சாட்டியுள்ளதாக திவயின பத்திரிகைச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு கொழும்பில் இயங்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குத் தேவையான வகையில் நாம் செயற்பட மாட்டோம். தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கு எவ்வாறு நிதி கிடைக்கப் பெறுகின்றது. மற்றும் அவை செலவிடப்படும் விதம் என்பன பற்றி விரிவான விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

இலங்கையில் இயங்கும் மனித உரிமைகள் அமைப்பொன்றுக்குச் சுமார் 40 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் தெரியவருகின்றது. (ந-5)

## ஜே.வி.பிக்...

முகவரிகளுக்குப் பதிவுத் தபாலில் அழைப்பு அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். விமல் வீரவன்ச உட்பட கட்சியை விட்டுச் சென்றவர்கள் தொடர்பில் மத்திய குழுவில் இதுவரை எந்தவித தீர்மானமும் மேற்கொள் எப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-5)


**UNIT**

**Jaffna / Nelliady**

**Intel Dual Core 2.0 Ghz, Asus P5GC-Mx, 512 mb DDR-II Kingston, 80Gb Sata HDD, 17" Samsung/Intex Color CRT, ATX Case with SMPS, DVD-Writter, UPS, Ps2 Keyboard, Mouse & Speaker. 53, 750/=**

| | |
|---|---|
| **Mother Boards:-** | |
| Asus P5 GC-MX1333Mhz | 6950/= |
| Foxconn intel 945 | 6300/= |
| AsRock LGA | 5800/= |
| Ecs Intel 945 1333Mhz | 6300/= |
| **Rams** | |
| Kingston DDR-I 256- 2500/=, 512- | 3750/= |
| Kingston DDR-II 1Gb - 2750/=,512- | 1550/= |
| **Hard Disks & Optical Drives** | |
| 40Gb IDE | 4800/= |
| 80Gb IDE | 5800/= |
| 250Gb Sata | 8600/= |
| DVD-RW | 4000/= |
| External Enclosure USB | 4750/= |
| Flash 4Gb Kingston | 2400/= |
| **Monitors** | |
| 15" Samsung/View Sonic CRT | 11,900/= |
| 17" Samsung/Intex Flat CRT | 14,500/= |
| 17" Samsung/LCD Wide | 25,500/= |
| 19" Samsung/LCD Wide | 31,000/= |
| 128 Mb AGP VGA | 4750/= |
| 256 Mb PCI EXPRESS VGA | 7500/= |
| **Power & Casings** | |
| ATX LGA Casings with SMPS | 4050/= |
| SMPS - ATX LGA 500W | 2500/= |
| **Toners** | |
| HP 12 A, 13A, 15A, 35A, 49A, 53A & 92A | |
| Canon EP22, 25 & 26, 303, 308 | |
| **Others** | |
| Keyboard Normal 500 MultiMedia 900 | |
| Mouse Optical 500/=, 600/=, 900/=, 1500/= | |
| Speaker 650/=, 1250/= & 2500/= | |
| **Woofers** Creative/MicroLab | 4000/= |
| **Printer & Scanners** | |
| HP D 1460 - 6250/=, HP P 1005- 16,900/= | |
| Canon Lide 25 6900/=, HP G 2410 - 11,900/= | |
| **Brand New Laptops From** | **59,000/=** |
| **New Intel Pentium From** | **39,000/=** |

**Special Reduction for Dealers, Assemblers, Schools, GO's & NGO's**

We Are Not Big But The Best

மனோகராச் சந்தி, 347, K.K.S. Road, Jaffna.

T.P. 4590720, 222 8844

MMV Road, Bus Stand, Nelliady, Karaveddy.

(C-1162)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.2 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.05.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.